Registered as a news paper.

பக்கங்கள்: இருபத்தினான்கு

விலை: ரூபா 6.00




# நமது ஈழநாடு

## தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 01 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 22 (15.01.2004) வியாழக்கிழமை இதழ்:106




## நிரந்தரமான சமாதான சூழல் ஏற்பட்டால் மாத்திரமே தனங்களப்பு - மறவன்புலோவில் மீள்குடியமர்வு!

### இராணுவ அதிகாரிகள் தெரிவிப்பு

(மீசாலை)

நிரந்தரமான சமாதானசூழல் ஏற்பட்ட பின்னரே மறவன்புலோ - தனங்களப்புப் பகுதிகளில் பொதுமக்கள் மீளக்குடியமர அனுமதிக்க முடியும் என்று படைத்தரப்பு அறிவித்துள்ளது.

மறவன்புலோ - தனங்களப்புப் பகுதி மக்களுடன் நேற்று நடத்தப்பட்ட கலந்துரையாடலிலேயே இராணுவ அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்தனர். கோயிலாக்கண்டி மகாலக்ஷ்மி வித்தியாலயத்தில் நேற்றுக்காலை 10 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வரணி 52 ஆவது படையணி கட்டளை அதிகாரியும், 521 ஆவது படைப்பிரிவு கட்டளை அதிகாரி லெப்.கேணல் மைத்திரி டயஸ் மற்றும் சாவகச்சேரி பிரதேச செயலர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

நிரந்தர சமாதானம் ஏற்பட்டாலேயே தனங்களப்பு - மறவன்புலோப் பகுதிகளில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் கடத்தப்பட்ட வாகனம் ஓமந்தைப் பகுதியில் பிடிபட்டது!

(கொழும்பு)

கொழும்பிலிருந்து கடத்திவரப்பட்டதாகக் கூறப்படும் ஹைஏஸ் வான் ஒன்றினை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயப் பகுதியினர் கண்டுபிடித்தனர்.

251 - 2023 என்ற இலக்கமுடைய ஹைஏஸ் வாகனமே இவ்வாறு கடத்திவரப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்த வாகனத்தினை செலுத்திவந்த நபரும் அதில் பயணம் செய்தவர்களும் விசாரணைசெய்யப்பட்டு, மேலதிக விசாரணைகளுக்காக தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - வாகனத்தின் உரிமையாளர் பற்றி விசாரித்ததன் பின்னர் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் குறித்த வாகனத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகள் குறித்து நோர்வே தூதுவர் - தமிழ்ச்செல்வனுடன் பேச்சு!

(கிளிநொச்சி)

**இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்றுக் காலை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.**

விமானப்படையின் ஹெலிகொப்ரர் மூலம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் கிளிநொச்சியை வந்தடைந்த நோர்வே தூதுவர் பிரட்ஸ்கர், முதலில் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்துக்கு விஜயம்செய்து - பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரனுடன் கலந்துரையாடினார்.

பின்னர், சமாதான செயலகத்தில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தினார். சுமார் ஒன்றரை மணிநேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர்,

தடைப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது தொடர்பாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஹெல்கிசனுடன் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் நோர்வேயில் சந்தித்துப் பேச்சு நடத்துவார்.

இந்தப் பேச்சில் கலந்துகொள்வதற்காக

(12 ஆம் பக்கம் பார்க்க)



நோர்வே தூதுவர் மற்றும் அதிகாரிகள் - தமிழ்ச்செல்வன் குழுவினர் சந்திப்பின்போது...!

## யுத்தநிறுத்தத்தை அமுல்செய்ய முக்கிய அதிகாரங்கள் தேவை!

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

போர்நிறுத்த உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கிய விடயங்களை நடைமுறைப்படுத்துவதாயின் சில முக்கிய அதிகாரங்கள் எம்மிடம் இருக்கவேண்டுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பிரதமர் கலந்துகொண்டு உரையாற்றும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

நாட்டில் தற்போது நிலவிவரும் அரசியல் குழப்ப நிலையில் சமாதான முயற்சியை முன்னெடுப்பதென்பது சிரமமான காரியமாகும். மக்கள் வழங்கிய ஆணையாலேயே சமாதான முயற்சியை முன்னெடுத்திருந்தோம். அதனால் கிடைக்கக்கூடிய நன்மைகளை மக்கள் அனுப

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு வந்த ஜேர்மன் அமைச்சர் புலிகளின் முக்கிஸ்தரை சந்திப்பார்!

### உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் ஒருவரை ஜேர்மனியின் வெளிநாட்டமைச்சர் கொழும்பில் சந்தித்து சமாதான முயற்சிகள் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளதாக ஜேர்மன் அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இன முரண்பாட்டை சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கும் வழிமுறைகள் தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதாகவும் அந்தச் செய்தி மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன், கொழும்பு வந்த ஜேர்மன் அமைச்சர் ஜனாதிபதி சந்திரிகா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்னாண்டோ உள்ளிட்ட அரச தரப்புப் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளார்.

இதன்பின்னர் இவர், மனிதவுரிமை ஆணைக் குழுவினர், ஜேர்மன் அரசின் உதவியுடன் இலங்கையில் செயற்பட்டுவரும் ஜி.ரி. இசற் நிறுவனப் பிரதிநிதிகளையும் சந்திப்பார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி. கூட்டணி; 20 ஆம் திகதி உடன்பாடு கைச்சாத்து!

### இரு கட்சிகளும் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி உடன்படிக்கை எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து கைச்சாத்திடப்படவுள்ளது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பை இரு கட்சிகளும் இணைந்து நேற்று வெளியிட்டன.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி செயலாளர் மைத்திரிபால சிறிசேனவும், ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவும் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த பத்து மாதங்களாக இரு கட்சிகளின் தலைவர்களுக்கும் இடையில் நடத்தப்பட்ட பேச்சுக்களின் முடிவிலேயே, தற்போதைய அரசாங்கத்தை பொதுத்தேர்தலில் தோற்கடிக்க கூட்டணி அமைப்பதென்று முடிவாகியது.

கூட்டணி உடன்பாடு எதிர்வரும் 20 ஆம் திகதி கைச்சாத்திடப்படும். இந்த உடன்பாடு கைச்சாத்திடப்படும் நிகழ்வுக்கான ஏற்பாடு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனந்தசங்கரியின் அனுமதியின்றி செயற்குழுவைக் கூட்டமுடியாது!

### உயர்நீதிமன்றம் மீண்டும் தடை உத்தரவு

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் அனுமதியின்றி கட்சியின் செயற்குழுக் கூட்டத்தைக் கூட்டமுடியாது என மீண்டும் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

கடந்த மாதம் கட்சியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி உயர்நீதிமன்றத்தில் செய்த மனுவை அடுத்து, அவரது அனுமதியின்றிக் கட்சிக்கூட்டத்தை வேறு யாரும் கூட்டமுடியாதெனத் தீர்மானிக்கப்பட்டு, தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இதனை எதிர்த்து கட்சி உறுப்பினர்கள் சிலர் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர். இதனை நேற்று விசாரணக்கு எடுத்துக்கொண்டபோதே உயர்நீதிமன்றம் மீண்டும் தடையுத்தரவை பிறப்பித்ததுடன், ஆனந்தசங்கரிக்கு எதிரான மனுவையும் தள்ளுபடிசெய்து நிராகரித்தது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# முறைகேடான முறையில் யாழ் பல்கலைக்கு கணக்காளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்

## ஊழியர் சங்கம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைகழகத்திற்கு புதிதாக கணக்காளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டமை முறைகேடானது என, யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

இந்தவருட ஆரம்பத்தில் புதிய கணக்காளர் பல்கலைகழகத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர். இத் தெரிவு முறைகேடானது எந்தவித முன்னறிவித்தலுமின்றி பரீட்சை எதுவும் நடைபெறாது கணக்காளர் பதவிக்கு தெரிவு நடைபெற்றது.

ஆனால்,இந்த கணக்காளர் தெரிவு முறையானது என, பல்கலைக்கழக பேரவை கூறுகின்றது என, யாழ் பலகலைகழ ஊழியர் சங்கம் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது என, மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி தெரிவித்துள்ளார்.

யசோ
இறபர் ஸ்டாம்
இப்பொழுது
பொலிமர் கொம்பியூட்டர்
இறபர் ஸ்டாம்
75/= மட்டுமே
யசோ (P.V.T.) லிமிட்
35,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்
(592)

அன்பு, அமைதி, சமாதானம் நிலவ
இறையாசிவேண்டி, நீண்டகால
அனுபவத்துடன் உங்கள்
நல்லாதரவில் என்றும்,
A.R.S. பிறின்டேர்ஸ்.
(கொம்பியூட்டர், ஸ்கிறீன் அச்சுவேலைகள் &
புத்தகம் கட்டுதல்)
புகையிரதநிலைய வீதி, (சி-2144) சாவகச்சேரி.

## சிறு விளம்பரம்

**கணக்குப் பதிவாளர் தேவை**

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் இயங்கும் ரதி வோச் வேக்ஸிற்கு கணக்குப் பதிவாளர் ஒருவர் தேவை. ஆங்கில அறிவுடன் கூடிய 35 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் விரும்பத்தக்கது. தகுதியுடையவர்கள் மேற்படி முகவரிக்கு நேரில் சமூகம் தரவும். (சி-2148)

**O/L MATHS - 2004**

ஆண்டு 6 இலிருந்து O/L வரை ஆரம்ப அறிவிலிருந்து சகல SECTIONS உம் PORSTIONS உம் கற்பிக்கப்பட்டு REVISION உடன் PAPER CLASS உம் PAPER TIMEING PRACTICE உம் 39 வருட அனுபவடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலயங்களில் நிறைவேற்றப்படும். க.ஆறுமுகநாதன், இல.10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (589)

**விற்பனைக்கு**

உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்து மின்சார உபகரணங்களும், பான்சி பொருட்களும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம். Telesonic, Rikon, Pacific, Usha, Sunda, வகையில் Fans, Gas Cooker, Rice Cookers, Blenders, Clocks, Food Jars, Ceiling Fans, Thermos, China Flask இன்னும் பலதரப்பட்ட உபகரணங்களும் உண்டு.

RAJU STORES
67, 69 Kasthuriar Road, Jaffna.
T.P:- 222 5224 Fax:- 222 5224
(சி-2060)

# சர்வதேச ஊடக பிரதிநிதிகள் நேற்று யாழ்.குடா வருகை!

(யாழ்ப்பாணம்)

டென்மார்க் ஊடகவியலாளர் பயிற்சிக் கல்லூரி இணைப்பான சர்வதேச ஊடக உதவிநிறுவனப் பிரதிநிதிகள் நேற்று யாழ்.குடா வருகை தந்தனர்.

இவர்கள் யாழ் மாவட்ட ஊடாகவியலாளர்களின் தரங்கள், அவர்களின் செயற்பாடுகளை அறிவதற்காக வடஇலங்கை பத்திரிகையாளர் சங்கம், யாழ்ப்பாண பத்திரிகையாளர் சங்கம், மேலதிக அரசாங்க அதிபர் ஆகியோரை சந்தித்துள்ளனர்.

பத்திரிகைப் பயிற்சிக் கல்லூரிகள் இங்கு இருப்பது தொடர்பாகவும், பத்திரிகையாளர்களின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கின்றது என, யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.பத்தினியம்மாவை இவர்கள் சந்திதது கேட்டபோது, இளம்பத்திரிகையாளர்கள் யாழ் மாவட்டத்தில் அதிகம் உள்ளார்கள். அனுபவம் குறைந்தவர்கள் இருப்பினும் திறமையாகச் செயற்படுகின்றார்கள். இவர்களை பயிற்றுவித்தால் சிறப்பாக பத்திரிகைத்துறையில் நிலைத்து நிற்கக்கூடியவர்களாக உருவாக்க முடியும் என கருத்துத் தெரிவித்தார்.

# உதவும்கரம் நிதியம் இன்று திறப்பு

அருட்கவி சி.விநாசித்தம்பி குழந்தைகள் உதவும்கரம் நிதியம் அங்குராப்பண வைபவம் இன்று பி.ப 3 மணிக்கு இணுவில் பொதுநூலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக வணிகத்தலைவர் க.தேவராஜா தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த நிகழ்வில் வரவேற்புரையை இரா.அருட்செல்வமும், ஆரம்ப உரையை ஞா.திருக்கேதீஸ்வரனும் சிறப்புரையை அ.பஞ்சலிங்கமும் நிகழ்த்தவுள்ளனர். இந்த நிகழ்வில் இந்த வருடத்துக்கான புத்தாண்டுக்கலண்டர்களும் வழங்கப்படும் எனவும் நிதியம் தெரிவித்துள்ளது.

## பொது அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களினதும் (சந்தைகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) நிறுவைகள், அளவைகள், நிறுக்கும் கருவிகள் அனைத்திற்கும் பின்வரும் திகதிகளில் யாழ்ப்பாண செயலகத்தில் காலை 9.00 மணி முதல் பி.ப.13.00 மணி வரை பரிசோதகரால் பரிசோதித்து முத்திரையிடப்படும் என மேலதிக அரசாங்க அதிபர் அவர்கள் அறிவித்துள்ளார்.

இச்சந்தர்ப்பத்தை சகல வர்த்தக நிலையங்களும் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

திகதிகள் :
19.01.2004
20.01.2004
21.01.2004
22.01.2004
23.01.2004

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
14.01.2004 (சி/2147)

இ.இராமலிங்கம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

இன்று வன்னி மண்ணில் மாபெரும்
தைப்பொங்கல் சிறப்பு விழா
உழவர் திருநாளாம் தைப்பொங்கல் தினத்தை வன்னி வேளாண் தொழில் நுட்ப நிறுவனம், சோழன் நிறுவனம், தமிழீழ வானொலி, நிதித்துறை, வணிக நிறுவனங்கள், தமிழீழ வைப்பகம் ஆகியன இணைந்து நடாத்தும் மாபெரும் தைப்பொங்கல் சிறப்புவிழா
இடம்:- வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவன முன்றில்,
யாழ்சாலை, கிளிநொச்சி.
காலம்:- இன்று காலை 9 மணி
இந்நிகழ்வில் கமக்கார அமைப்பினர், உழவர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
நிகழ்வுகளை தமிழீழ வானொலி சர்வதேச வானொலியுடன் இணைந்து காலை 9 மணி தொடக்கம் நேரடி ஒலிபரப்பு செய்யவுள்ளது.
உழவர்கள் வரவேற்பில் முக்கிய நிகழ்வாக பஞ்சமூர்த்தி குழுவினருடைய நாதஸ்வரக் கச்சேரி இடம்பெறும்.
உழவர் பெருமக்கள் அனைவருக்கும் இந்நாளில் வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்வடைகிறோம்.
விழா ஏற்பாட்டாளர்கள்
(590)

# பயங்கரவாத தடைச் சட்டம் அமுல் 2 லட்சம் பேர் நேரடியாகப் பாதிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலுக்கு வந்த காரணத்தால், சுமார் 2 இலட்சம் பேர் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சட்டமானது பாதுகாப்புப் படையினருக்கு வரையறையற்ற அதிகாரங்களை வழங்கியுள்ளது.

இதனால், மனித உரிமை மீறல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்துள்ளதாக மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டம் 1979 ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவந்தது. அது இதுவரையில் நடைமுறையில் உள்ளது.

25 வருடங்களைக் கடந்துவிட்ட இந்தச் சட்டம், தமிழ் பேசும் மக்களுக்கு எதிரானதாகவே பெரிதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமை நிறுவனங்களும், இலங்கையின் மனித உரிமை நிறுவனங்களும் இது ஒரு ஜனநாயக விரோத சட்டம் என, இந்தச் சட்டத்தை கண்டித்திருந்தன.

எனினும், பதவிக்கு வந்த அரசுகள் எவையுமே இது தொடர்பில் எந்தவிதமான நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறும், இந்தச் சட்டம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்குமாறும் இந்த அமைப்பு கோரியுள்ளதாக அமைப்பின் செயலர் கந்தசாமி விடுத்த செய்திக்குறிப்பில் கேட்டுள்ளார். (01)



20 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட நெடுங்கேணி சுற்றயல்கூற்று மருத்துவமனையின் ஆண்கள் விடுதியினை வடக்கு-கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் திட்டப்பணிப்பாளர் எஸ்.குமாரவேல் நாடாவை வெட்டித் திறந்துவைப்பதைப் காணலாம்.

# துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சிறுமி உட்பட இருவர் உயிரிழப்பு

## பாணந்துறையில் சம்பவம்

(கொழும்பு)

கொழும்பு - பாணந்துறைப் பகுதியில், சிறுமி உட்பட இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பாணந்துறை தோட்டப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் முக்கிய போதைப்பொருள் கடத்தல் காரரான கேதிபந்துன (வயது 41) என்பவரும், சிறுமி ஒருவருமே உயிரிழந்தவர்களாவர்.

கேதிபந்துன - தனது உறவினர் வீட்டுக்கு முச்சக்கரவண்டி ஒன்றில் சென்றுவிட்டு, வீடு திரும்பிக்கொண்டிருந்தவேளை - இவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது. இதன்போது அங்கிருந்த கடை ஒன்றிற்குச் சென்றுவிட்டு திரும்பியவேளை சிறுமியும் சூட்டுக்காயங்களுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த கேதிபந்துன - போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட முக்கிய நபர் என விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் தெரிவித்தனர். (01)

# பன்முகப்பாடத்திட்டத்திற்கு அமைய ஒரு பாடத்திற்கு வெவ்வேறு வகையான மூன்று செயல்நூல்கள் அறிமுகம்!

(கொழும்பு)

இந்த வருடம் முதல் பன்முகப் பாடத்திட்டத்திற்கு அமைய ஒரு பாடத்திற்கு வெவ்வேறு வகையான மூன்று செயல்நூல்களை அறிமுகப் படுத்த உள்ளதாக, கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பன்முகப்பாடத்திட்டத்திற்கு அமைய ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறு வகையான மூன்று செயல் நூல்கள் வெளியிடப்படவுள்ளது. இந்த மூன்று செயலநூல்களில் ஒன்றினை பாடசாலை அதிபர், ஆசிரியர் குழாமே தெரிவுசெய்யலாம். தெரிவு செய்யப்படும் செயல்நூல் பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும். மிகுதி இரண்டு செயல்நூல்களும் ஒவ்வொரு பாடசாலை நூலகத்திலும் மாணவர் பாவனைக்காக வைக்கப்படும்.

மாணவர்களுக்கு நூலகத்தில் வைக்கப்படும் புத்தகம் தேவைப்படின், பணம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். இவ்விடயத்தில் பாரதூரமான கருத்து முரண்பாடுகள் இல்லை. தனியார் அச்சகங்களிலேயே இந்த நூல்கள் அச்சிடப் படவுள்ளன. குறைபாடுகள் சில இருக்கும். அவற்றை நாம் திருத்துவோம். நாம் பழைய முறையில் இருந்தால், முன்னேறமுடியாது. அவவாறு முன்னேறாதுவிடின் கல்வியில் பின்தங்கிவிடுவோம்.

இதுவரை காலமும் தரம் ஒன்று முதல் தரம் பதினொன்று வரைதான் இலவச பாடநூல் வழங்கப்பட்டது. இம்முறை உயர்தர மாணவர்களிற்கு இலவச ஆங்கிலப் பாடநூல் ஒன்று வழங்கப்படவுள்ளது என அவர் தெரிவித்தார்.

## கல்விப் பேரவையின் கலந்துரையாடல

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்விமேம்பாட்டுப் பேரவையினருக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 21 ஆம் திகதி கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி கல்வித்திணைக் களத்தில் காலை 10 மணியளவில் இந்தக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் கூட்டம் இடம்பெறவுள்ளமையால், சகல வடமாகாண கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்களையும் இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு தேசிய கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் கேட்டுள்ளார்கள். (ப)

# லஞ்ச ஊழல் ஆணைக்குழு இயங்கமுடியாத நிலையில்!

## ஆணையாளர் இன்மையே காரணமாம்

லஞ்ச ஊழல் ஆணைக்குழு இயங்கமுடியாத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆணைக்குழுவின் ஆணையாளர் கடந்தவருடம் பெப்ரவரி மாதம் இறந்தபின்னர், இதுவரை அந்தப் பதவிக்கு எவரும் நியமிக்கப்படாமையினாலேயே இந்தநிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஆணைக்குழுவின் அதிகாரி கருத்துத் தெரிவிக்கையில் - லஞ்ச ஊழல் தொடர்பான முறைப்பாடுகளுக்கு நாம் சட்டரீதியாக விசாரணைகளை ஏற்றுக் கொள்ளவோ அல்லது இவற்றுக்கெதிராக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கவோமுடியாத நிலையிலுள்ளோம்.

அத்துடன், ஆணைக்குழு இதுவரை 1803 முறைப்பாடுகளைப் பெற்றுள்ளது. இதில் 390 முறைப்பாடுகள் லஞ்சம் தொடர்பாகவும், 721 முறைப்பாடுகள் ஊழல் தொடர்பாகவும் உள்ளன. ஆனால், இவை எல்லாவற்றிற்கும் ஆதாரங்கள் இருந்தபோதும், எம்மால் ஆணையாளர் இன்மையால் எதுவும் செய்யமுடியாதுள்ளது. லஞ்சம் ஊழல் நடவடிக்கைகளைத் துணிவாக எதிர்கொண்டு நடவடிக்கை எடுக்க, ஆணையாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# திலங்க சுமதிபாலவின் வழக்கு விசாரணைகளிலிருந்து விலகுவதாக பிரதமநீதிவான் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட்சபைத் தலைவர் திலங்க சுமதிபாலவின் வழக்கு விசாரணைகளிலிருந்து தாம் விலகுவதாக, கொழும்பு பிரதம நீதிவான் ரி.வி. போயாகொட அறிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணை ஆரம்பமானபோது, விசேட அறிக்கை ஒன்றை விடுத்த நீதிவான் - ஊடகங்கள், தான் வழக்கு விசாரணையை நடத்துவது குறித்து சந்தேகம் எழுப்பி இருப்பதால், தமக்கு மனோரீதியான கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்.

இதனால், தன்னால் தொடர்ந்தும் வழக்கை நடத்தமுடியாது இருப்பதாக அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதேவேளை, திலங்க சுமதிபாலவுக்கு எதிரான வழக்குக்குத் தீர்வு வழங்குவது நான்காவது தடவையாகப் பின்போடப்பட்டது. இந்த மாதம் 19 ஆம் திகதிக்கு வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# பிரதமர் ரணில் – பிரபாகரன் ஒப்பந்தம் தனிப்பட்ட இருவரால் செய்யப்படவில்லை

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

ரணில் விக்கிரமசிங்கவும் பிரபாகரனும் செய்துகொண்ட ஒப்பந்தம் - தனிப்பட்ட இருவரால் செய்யப்பட்ட ஒப்பந்தம் இல்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு தொலைக்காட்சியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றும்போதே, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அமைச்சுப் பொறுப்புக்களைத் தான் பொறுப்பேற்றுக்கொண்டாலும், போர் நிறுத்த உடன்பாடு தொடர்ந்தும் பேணப்பட்டுவரும் என்றும், நாட்டின் நலன், கட்சி அனுமதியுடனேயே இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். ரணில் விக்கிரமசிங்க இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொண்டார் என்று சொன்னாலும்கூட தனக்கோ, நோர்வே தரப்பிற்கோ இது தொடர்பாக அவர் அறிவிக்கவில்லை என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

தமது பதவிக்காலம் 2005 ஆம் ஆண்டுவரையும் இருந்தாலும், அந்த பதவிக்காலம்வரை தாம் பதவிவகிக்கக்கூடிய வாய்ப்பு இருக்குமா என்று தெரியவில்லை என்றும், நடைமுறைப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டியது அவசியம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு உண்டு. அதற்கு தன்னுடைய கட்சி ஒத்துழைப்பு வழங்கும் என்றும், ஐக்கிய தேசியக் கட்சி இதற்கான முன்னெடுப்புக்களைத் தொடர்ந்தும் மேற்கொள்ளவேண்டும் என்றும் ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார். (01)

# தேர்தல் நடத்தும் தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிப்பு

தேர்தல் ஒன்றை நடத்தும் தீர்மானம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸநாயக்க தெரிவித்தார்.

மாகாணசபைத் தேர்தல்களை இந்த ஆண்டு திட்டமிட்டபடி நடத்தவுள்ளதாக உள்ளூராட்சி மாகாண சபை தலைவர் தெரிவித்தார்.

ஏழு மாகாணசபை தேர்தல்களையும் ஒரேநேரத்தில் நடத்துவது தொடர்பாக இதுவரை தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், வடக்கு-கிழக்கு மாகாணத் தேர்தல் காலம் ஒத்திவைக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் தேர்தல் ஆணையாளர் நாயகம் தலைமையில் வடக்கு - கிழக்கு மாகாண தெரிவத்தாட்சி அதிகாரிகளுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# தொல்பொருட்களுக்கான ஆலோசனைக்குழு நியமனத்தில் தமிழர்கள் புறக்கணிப்பு!

(கொழும்பு)

தொல்பொருட்களுக்கான ஆலோசனைக்குழு உறுப்பினர் நியமனத்தில் - தமிழர்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இலங்கையில் காணப்படுகின்ற தொல்பொருட்கள் தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள 28 உறுப்பினர்களில், தமிழர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

மாறாக இவர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களின் இந்த நியமனத்தைக் கல்வி கலாசார அமைச்சர் வழங்கியுள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் 2004.01.09 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ளது.

தனிச்சிங்கள இனத்தவரைக் கொண்டுள்ள இந்தச் சபை, தமிழர்கள் வாழுகின்ற பகுதிகளில் எந்த விதமான பங்களிப்புக்களை வழங்க இருக்கின்றது என்பது தொடர்பாக கேள்விகள் எழுந்துள்ளது.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் தொல்லியல், வரலாற்றுத்துறை, சமூகவியல் ஆகிய துறைகளில் சிறப்புத்தேர்ச்சியுள்ள பேராசிரியர்கள், கல்விமான்கள், விரிவுரையாளர்கள் சேவையிலுள்ளபோதும், அவர்கள் இந்தப் பதவிகளில் புறக்கணிக்கப்பட்டுள்ளமையை - தொல்லியல் வரலாற்றுத்துறை ஆராய்வாளர்கள் கண்டித்துள்ளனர். (01)

# தம்மிக படுகொலையில் அமைச்சருக்கும் தொடர்பு!

(கொழும்பு)

கொழும்பு நீதிமன்றத்தினுள் வைத்து பாதாள உலகத் தலைவர் தம்மிக அமரசிங்க படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் முக்கிய அமைச்சர் ஒருவர் சம்மந்தப்பட்டிருப்பதாகப் பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டிச் செய்திகள் தெரிவித்தன.

தம்மிக அமரசிங்கவை சுட்டுக் கொன்றதாகச் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டவர் அளித்த தகவலிலேயே இக்கொலையின் பின்னணியில் முக்கிய அமைச்சர் ஒருவரும், இரண்டு வர்த்தகப்புள்ளிகளும் இருப்பது தெரியவந்துள்ளதாகக் கொழும்பு குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்தப் படுகொலை தொடர்பாக நான்கு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

## பொங்கல் திருநாள்

வன்னிவாழ் மக்களும், வேளாண் நிறுவனங்களும் இணைந்து நடத்தும் பொங்கல் விழா இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள வன்னி வேளாண தொழில்நுட்ப நிறுவன முன்றலில் நடைபெறவுள்ளது இந்த நிகழ்வுகள் அனைத்தையும், தமிழீழ வானொலி சர்வதேச தமிழ் வானொலிகளுடன் இணைந்து, அகிலமெங்கும் நேரடி ஒலிபரப்புச் செய்யவுள்ளது.

### பாகிஸ்தான் அணியுடனான

# நேற்றைய போட்டியில் வென்றதன் மூலம் நியூஸிலாந்து தொடரைக் கைப்பற்றியது!



(நேப்பியர்)

நியூஸிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நியூஸிலாந்தில் நடைபெற்றுவரும் ஐந்து போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் போட்டித் தொடரில் - நேற்று நேப்பியரில் நடந்த நான்காவது போட்டியில் நியூஸிலாந்து அணி பாகிஸ்தானை எட்டு விக்கெட்டுக்களால் வென்றதுடன், தொடரையும் கைப்பற்றியுள்ளது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற நியூஸிலாந்து அணி, பாகிஸ்தான் அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இதன்படி துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 36.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 126 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. இதில் சொகைப் அக்தார் மாத்திரமே ஆட்டமிழக்காமல் அதிகூடிய ஓட்டங்களாக 27 ஓட்டங்களைப் பெற்றார். அணித்தலைவர் இன்சமாம் உல்ஹக் மற்றும் சொகைப் மலிக் இருவரும் ஓட்டமெதுவும் பெறாமலேயே ஆட்டமிழந்தனர். மற்றைய வீராகள் 15 இற்குக் குறைவான ஓட்டங்களையே பெற்றனர். பந்துவீச்சில் டரல் ரபி 3 விக்கெட்டுக்களையும், மில்ஸ், ஓரம், கெய்ன்ஸ் மூவரும் தலா 2 விக்கெட்டுக்களையும், விற்ரோறி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி - இரண்டு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 22.5 ஓவர்களில தனது வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் கம்மிங், கெய்ன்ஸ் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 45, 25 ஓட்டங்களைப் பெற்றனர். அணித்தலைவர் பிளெமிங் 29, மார்ஷல் 2 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். 22.5 ஓவர்களில் பாகிஸ்தான் அணி 26 உதிரி ஓட்டங்களை நியூஸிலாந்துக்கு விட்டுக்




கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

ஐந்து போட்டிகள் கொண்ட தொடரில் - நடைபெற்ற நான்கு போட்டிகளில் நியூஸிலாந்து அணி 3 போட்டிகளில் வென்று தொடரைக் கைப்பற்றியுள்ளது.

### முத்தரப்பு ஒருநாள் போட்டியில்

# 7 விக்கெட்டுக்களால் இந்தியா சிம்பாப்வே அணியை வென்றது




இந்திய, அவுஸ்ரேலிய, சிம்பாப்வே அணிகளுக்கிடையில் அவுஸ்ரேலியாவில் நடைபெற்றுவரும் முத்தரப்பு சர்வதேச ஒருநாள் போட்டியில்- நேற்று நடந்த பகல் ஆட்டத்தில் இந்திய அணி - சிம்பாப்வேயை 7 விக்கெட்டுக்களால் வென்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வே அணித்தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். இதன்படி முதலில் ஆடிய சிம்பாப்வே அணி இந்திய பந்துவீச்சாளர்களின் அபார பந்துவீச்சினால் திணறியது. இதில் சேவாக், பதான், கும்ளே, பாலாஜி ஆகியோர் சிறப்பான முறையில் பந்துவீச்சினை மேற்கொண்டனர்.

114 ஓட்டங்கள் எடுப்பதற்குள் சிம்பாப்வே அணி தனது 6 விக்கெட்டுக்களை இழந்து திணறியது. இருந்தபோதிலும் அணித்தலைவர் ஸ்ரீக்-எர்வின் ஜோடி ஏழாவது விக்கெட் இணைப்பாட்டமாக ஆட்டநேரம் முடியும்வரை தொடர்ந்தது. இவர்கள் கடைசி 14 ஓவர்களில் 100 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். 50 ஓவர்கள் நிறைவில் சிம்பாப்வே அணி 6 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அணித்தலைவர் ஸ்ரீக், எர்வின் இருவரும் ஆட்டமிழக்காது முறையே 59, 48 ஓட்டங்களையும், கார்லிஸ் 36 ஓட்டங்களையும் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் சேவாக் 2 விக்கெட்டுக்களையும், பதான், கும்ளே, பதானி மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி - 37.4 ஓவர்களில் மூன்று விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து தனது வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சேவாக் அதிரடியாக ஆடி ஐந்து சிக்ஸர்கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 90 ஓட்டங்களையும், டெண்டுல்கர் 44 ஓட்டங்களையும், பதானி 15 ஓட்டங்



களையும் பெற்று ஆட்டமிழந்தனர். அணித்தலைவர் கங்கூலி, லக்ஸ்மன் இருவரும் ஆட்டமிழக்காமல் முறையே 32, 13 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹொண்டோ, எர்வின், பிறைஸ் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இந்திய அணிசார்பில் நேற்றைய போட்டியில் சஞ்சய் பங்கருக்குப் பதிலாக பதானி சேர்க்கப்பட்டிருந்தார். நேற்றைய போட்டியின் ஆட்ட நாயகனாக சேவாக் தெரிவுசெய்யப்பட்டார்.

## விளையாட்டு

# யாழ். பட்மின்ரன் சுற்றுப் போட்டியில் உடுவில் மான்ஸ் அணிகள் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பாடசாலைகளுக்கிடையிலான பட்மின்ரன் சுற்றுப் போட்டி - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி வை.எம்.சி.ஏ உள்ளக அரங்கில் இடம்பெற்றது. 12 ஆம், 13 ஆம் திகதிகளில் இடம்பெற்ற ஆண், பெண் அணிகளுக்கிடையிலான போட்டியில் - ஆண்கள் பிரிவிலும், பெண்கள் பிரிவிலும் உடுவில் மான்ஸ் பாடசாலை அணி வெற்றிபெற்றது.

பெண்கள் பிரிவில் அரையிறுதியில் விளையாடிய சுண்டிக்குளி மகளிர் கல்லூரி - சுழிபுரம் விக்ரோறியா பெண்கள் அணியை வென்று இறுதியாட்டத்துக்குத் தெரிவாகியது.

அடுத்த அரையிறுதியில் விளையாடிய உடுவில் மான்ஸ் பெண்கள் அணி, எதிரணி வராமையால்- நேரடியாக இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. இறுதிப் போட்டியில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணியை நேர் செட்களில் வென்று மான்ஸ் பெண்கள் அணி சம்பியனாகியது. சுண்டிக்குளி மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தைப் பெற்றது. மூன்றாம் இடத்தை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி பெற்றது.

ஆண்கள் பிரிவில் அரையிறுதியில் சென்.ஜோன்ஸ் கல்லூரியும், உடுவில் மான்ஸ் ஆண்கள் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடந்த போட்டியில் மான்ஸ் கல்லூரி வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியது. மற்றைய அரையிறுதியில் விளையாடிய வயாவிளான் மத்திய கல்லூரி அணி - எதிர்த்தாடிய வரணி மகாவித்தியாலய அணியை வென்று இறுதியாட்டத்துக்குத் தெரிவாகியது.

இறுதிப்போட்டியில் மான்ஸ் ஆண்கள் அணி மிக இலகுவாக வயாவிளான் அணியை வென்று சம்பியனாகியது. மூன்றாம் இடத்துக்கான போட்டியில் - சென்.ஜோன்ஸ் கல்லூரி மிக இலகுவாக வரணி மகாவித்தியாலய அணியை வென்றது. (205)

# பாடசாலை மேசைப்பந்தாட்டம்: மத்திய கல்லூரி அணி வெற்றி!

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மேசைப்பந்தாட்டப் போட்டியில் - நேற்று பெண்களுக்கான போட்டி இடம்பெற்றது. சுண்டிக்குளி வை.எம்.சி.ஏ உள்ளரங்கில் இடம்பெற்ற இப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி சம்பியனாகத் தெரிவாகியது.

அரையிறுதியில் மத்திய கல்லூரியுடன் மோதிய சாவகச்சேரி இந்துக் கல்லூரி 1:3 என்ற ரீதியில் தோல்வியுற்றதால் மத்திய கல்லூரி அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

மற்றைய அரையிறுதியில் விளையாடிய புனித பத்திரிசியார் கல்லூரி அணி - தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியை 3:0 என்ற நிலையில் வென்று இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியது.

இறுதிப்போட்டியில் மத்திய கல்லூரி 3:0 என்ற வெற்றி அடிப்படையில் சம்பியனாகியது. இரண்டாம் இடத்தை புனித பத்திரிசியார் கல்லூரி அணி பெற்றது. மூன்றாம் இடத்துக்கான போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி - தன்னை எதிர்த்து விளையாடிய சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணியை 3:0 என்ற நிலையில் வென்று மூன்றாம் இடத்தைப் பெற்றது. (205)

### காங்கிரஸ் கூட்டணியுடன்

# தேசியவாத காங்கிரஸையும் இணைக்க சோனியா முயற்சி

(புதுடில்கி)

நாடளுமன்ற தேர்தல் நெருங்குவதைத் தொடர்ந்து, அரசியல் கட்சிகள் புதிய கூட்டணி அமைப்பதில் தீவிரம் காட்டி வருகின்றன.

பாரதீய ஜனதாவை வீழ்த்த மத சார்பாற்ற ஒருமித்த கட்சிகளை ஒரே அணியில் திரட்டும் முயற்சியில் காங்கிரஸ் தலைவி சோனியா ஈடுபட்டுள்ளார். தி.மு.க தலைவர் கருணாநிதி உட்பட, பல்வேறு கட்சித் தலைவர்களுடன் சோனியா ஏற்கனவேபேச்சு நடத்தி விட்டார்.

சரத்பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் கட்சியையும் இந்தக் கூட்டணியில் சேர்க்க சோனியா விரும்புகிறார். சரத்பவார், சோனியா வெளிநாட்டவர் என்ற கோஷத்தை சமீபகாலாமாக ஒதுக்கி வைத்துவிட்டார். ஆனால், காங்கிரஸ் கூட்டணியில் சேருவதுபற்றி சரத்பவார் இன்னும் முடிவு எதுவும் எடுக்கவில்லை.

இறுதி முடிவு எடுப்பதற்காக - தேசியவாத காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்று நடந்தது.

இந்த நிலையில் - சோனியா நேற்று சரத்பவாருடன் தொலைபேசியில் பேசினார். மத சார்பற்ற கட்சிகள் ஒரே அணியில் சேரவேண்டும் என்றும், இதில் தேசியவாத காங்கிரசும் இடம்பெறவேண்டும் என்றும் அப்போது அவர் கோட்டுக் கொண்டார்.

இந்தத் தகவலை காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஆனந்த் சர்மா தெரிவித்தார்.

சரத்பவார் நேற்று சிறப்பு விருந்து நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார். இதில் கலந்துகொள்ளுமாறு - சோனியாவுக்கு சரத்பவார் விடுத்த அழைப்பை சோனியா ஏற்றுக்கொண்டார்.

இதன்படி - நேற்று மாலை விருந்து நிகழ்ச்சியில் சோனியாவும், சரத்பவாரும் சந்தித்துக் கூட்டணி பற்றி கலந்துரையாடினர். தேசியவாத காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்திலேயே கூட்டணி தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

# ஜோர்ஜ் பெர்னாண்டஸ் விபத்தில் காயமுற்றார்!



இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணாண்டஸ், நேற்றுமுன்தினம் இரவு பீஹார் மாநிலம்-ஹில்சா என்ற இடத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்தபோது, அவரது கார் பீஹார் செரீப் தேசிய நெடுஞ்சாலையில் விடுதி ஓரத்தில் நின்ற ஒரு லொறி மீது மோதியது. பனி மூட்டம் காரணமாக இந்த விபத்து நடந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த் விபத்தில் ஜோர்ஜ் பெர்ணாண்டஸின் கார் பலத்த சேதமடைந்தது. அவரது தலையிலும், காலிலும் காயம் ஏற்பட்டது. உடனடியாக அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஜோர்ஜ் பெர்ணாண்டஸின் காரைச் செலுத்தி வந்தவருக்கும் பலத்த காயம் ஏற்பட்டது. உயிருக்கு ஆபத்தான நிலையில் அவருக்கு பாட்னா வைத்தியசாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டுவருகிறது.

# தி.மு.க அமைத்த கூட்டணி எஞ்சின் இல்லாத ரயில் பெட்டி

### பா.ஜ.கட்சி செயலர் இல.கணேசன்

(சென்னை)

தி.மு.க கூட்டணி எஞ்சின் இல்லாத ரயில் பெட்டி போன்றது என அகில இந்திய பாரதிய ஜனதா செயலாளர் இல.கணேசன் தெரிவித்தார். பத்திரிகையாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது -



நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்த - பிரதமர் வாஜ்பாய் ஒத்துக்கொண்டிருக்கிறார். தேர்தல் முரசு கொட்டப்பட்டுவிட்டது.

எனவே, களத்தில் இறங்குகின்ற ஒவ்வொருவரும் வரிந்து கட்டிக்கொண்டு தேர்தல் பணியை தொடங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

கூட்டணியிலிருந்து விலக வேண்டாம் என்று எங்களின் விருப்பத்தை பா.ம.கவுக்குத் தெரிவித்தோம். ஆனாலும் அந்தக் கட்சி தேசிய ஜனநாயகக் கூட்டணியிலிருந்து விலகியிருக்கிறது. பா.ம.க விலகியதால் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு இழப்பு ஏதுமில்லை.

நடைபெறப்போவது பிரதமர் யாரென்பதற்கான தேர்தல். ஒரு கூட்டணியில் எத்தனை கட்சிகள் சேர்கின்றன என்பது முக்கியமல்ல. எந்தக் கட்சி நல்ல பிரதமர் வேட்பாளரை நிறுத்துகிறது என்பதுதான் முக்கியம்.

தமிழகத்தில் தி.மு.க அணியில் நிறையக் கட்சிகள் சேர்ந்திருப்பது பற்றி நாங்கள் கவலைப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

# யாழ். பாடசாலைகளின் அபிவிருத்திக்கு 420 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

## யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் தகவல்

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் அபிவிருத்திக்கென இவ்வாண்டு பல்வேறு தரப்பினராலும், 420 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

இவ்வாண்டு யாழ்.மாவட்ட கல்விசார் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென, பல அமைப்புக்களும் முன்வந்து பல மில்லியன் ரூபா வழங்கவுள்ளது. அரசாங்கத்தினூடாக 180 மில்லியன் ரூபா கிடைக்கவுள்ளன. இதில் 150 மில்லியன் ரூபா இந்து கலாசார அமைசசினூடாகப் பிரதமர் அலுவலகம் யாழ்.மாவட்டக் கல்வி நடவடிக்கைகளுக்காகவும், மாணவர் கல்வி விருததிக்காகவும் வழங்கவுள்ளது.

மேலும், 30 மில்லியன் ரூபா பணத்தை அரசு தனது வரவு-செலவுத்திட்டத்திற்கமைய வழங்கவிருக்கின்றது.

இதனைவிட பல அரச சார்பற்ற நிறுவனங்களும் - 200 மில்லியன் ரூபாவுக்கு மேல் கல்விசார் நடவடிக்கைகளுக்கு செலவுசெய்ய முன்வந்துள்ளன.

இதன்படி, நிக்கொட் நிறுவனம் 100 மில்லியன் ரூபாவை பாடசாலைகளின் புனரமைப்புக்கும், புதிய கட்டடங்களை அமைப்பதற்கெனவும் செலவிடத் திட்டமிட்டுள்ளது. இதேபோல் யுனிசெவ் நிறுவனம் இந்த ஆண்டு 80 மில்லியன் ரூபாவை பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக்கொடுக்கவும், மாணவர்களின் நலன்களுக்குமாக செலவிடவுள்ளதாக அறியவருகிறது.

ஜி.ரி.இசற் - பாடசாலைகளுக்கான குடிநீர் வழங்கல், கிணறுகள் அமைத்தல், மலசலகூடம் நிறுவுதல் முதலான வேலைகளுக்கென, 20 மில்லியன் ரூபாவைச் செலவு செய்யத்திட்டமிட்டுள்ளது.

இதேவேளை, எஸ்.டி.சி என்னும் சுவிஸ்நாட்டைச் சேர்ந்த அபிவிருத்தி நிறுவனமொன்று, தென்மராட்சி பிரதேசத்தில் போரினால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்கும் பணிகளை, கடந்த ஆண்டு இறுதியிலிருந்து மேற்கொண்டு வருகிறது. இது தனது சேவையை இந்த ஆண்டும் தொடர்ந்தும் நடத்தவுள்ளது. இந்த நிறுவனம் கடந்த ஆண்டு 60 மில்லியன் ரூபாவைத் தனது திட்டத்திற்காக ஒதுக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ள கல்வி அபிவிருத்திக்கான நிதியானது, இதுவரைகாலமும் ஒதுக்கப்பட்ட நிதியைவிட அதிகமாக இருப்பதால், இந்த ஆண்டு கல்விசார் அபிவிருத்தி நடவடிக்கைகள் சிறப்பாக அமையலாமென எதிர்பார்க்கப்படுகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)



பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவுவிழாவின் கூத்துப்போட்டி அண்மையில் இடம்பெற்றது. இதில் காத்தவராயன் சிந்துநடைக் கூத்தின் ஒரு காட்சியைக் காணலாம். (91)

### விஷமிகளால் கடை எரிப்பு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஸ்ரேசனடிப் பகுதியில் அமைந்துள்ள வெல்டிங் கராச் ஒன்று விஷமிகளால் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது. இதன்போது, சுமார் ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து சாம்பலாகின. (111)

### புலமைப் பரீட்சை முடிவுகள் இம்மாத இறுதியில்

ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் - இந்த மாத முடிவில் அல்லது அடுத்த மாத முற்பகுதியில் வெளியாகுமென்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. இந்தப் பரீட்சைக்கு 3 லட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### பூட்டு உடைத்து சைக்கிள் திருட்டு

நல்லூர் அரசடி வீதியில் அமைந்துள்ள இலட்சுமி உணவகத்தில், நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்ற திருட்டு சம்பவத்தின் போது, 7 சைக்கிள்கள் களவாடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது - இரவில் கடையின் பாதுகாப்பிற்காக உரிமையாளர் தங்குவதில்லை என்பதைத் தெரிந்து கொண்ட திருடர்கள் - பின்பக்கக் கதவினை உடைத்து, அங்கு நின்ற 7 சைக்கிள்கள் உட்பட, சோடா மற்றும் இனிப்பு வகைகளையும் திருடிச்சென்றுள்ளனர். (205)

## சின்னஞ் சிறு செய்திகள்

### சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு

(வடமராட்சி)

தொண்டமனாறு செல்வச்சந்நிதியான் சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் வெள்ளிக்கிழமைதோறும் நடாத்திவரும் வாராந்த நிகழ்வில், நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு மாணவர் நிகழ்வு இடம்பெறும். இதில் ஸ்ரீகணேசா அறநெறி பாடசாலை மாணவர்கள் பங்குபற்றுவார்கள். (17)

### புதிய முன்பள்ளி

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறை கிழக்கில் புதிய முன்பள்ளி ஒன்று - ஊர்காவற்துறை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆ.சூசைப்பிள்ளை தலைமையில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் புதிய முன்பள்ளிக்கு, அந்தோனியார் முன்பள்ளி எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளதுடன், இந்த முன்பள்ளி மூலம் அப்பகுதியிலுள்ள 35 சிறார்கள் வருடாவருடம் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (44)

### அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

வலிகாமம் வலயத்திற்குட்பட்ட காங்கேசன்துறை ம.வி., வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில், அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவையின் வகுப்பு 1, வகுப்பு 2-1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மாதிரி விண்ணப்பப்படிவத்தினை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு, அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப்பங்களை 19.01.2004 ஆம் திகதிக்குமுன் உரியமுறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

### மகளிருக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

இந்தமுறை நடைபெறவுள்ள முப்பதாவது தேசிய விளையாட்டு விழாவிலே, மகளிருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியும் நடைபெறவுள்ளது.

இதற்கான யாழ். மாவட்ட அணி விரைவில் தெரிவுசெய்யப்படவுள்ளதால், ஆர்வமுள்ள வீராங்கனைகள், கழகங்கள் - மாவட்ட விளையாட்டு அதிகாரியுடன் தொடர்புகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ச)

# துரித அபிவிருத்தித்திட்டம் தொடர்பான இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்குக

## யாழ். செயலகத்திடம் திட்டமிடல் திணைக்களம் கோரிக்கை

இந்த ஆண்டுக்கான துரித அபிவிருத்தித் திட்டம் குறித்த இறுதி அறிக்கையை சமர்ப்பிக்குமாறு, யாழ். செயலகத்தை தேசிய திட்டமிடல் திணைக்களம் கோரியிருப்பதாக, யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 29 ஆம் திகதி - யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய துரித அபிவிருத்தித் திட்டம் குறித்த கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதில், வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு முதன்மை வழங்கப்பட்டதுடன், சுகாதாரம், வீடு அபிவிருத்தி, தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தல் முதலான விடயங்களிலும் அதிக கவனம் செலுத்தப்படவிருப்பதாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது.

இதற்கான சகல திட்டமிடல்கள் மற்றும் நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாக, ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவிலிருந்தும் அறிக்கைகள் பெறப்பட்டிருந்தன.

இவற்றைவிட அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் முதலியவற்றிடமிருந்தும் பல்வேறு அறிவுறுத்தல்கள் பெறப்பட்டிருந்தன.

இவற்றின் அடிப்படையிலேயே இறுதியானதொரு திட்டமிடல் அறிக்கையைத் தமக்கு வழங்குமாறு, தேசிய திட்டமிடல் நிலையத்தினால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதனைப் பெறும்பொருட்டு, தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மேலதிகப் பணிப்பாளர் ஒருவரும் நேற்று யாழ். செயலகத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ளதாகவும், இந்த அறிக்கை நாளை, அவர் மூலம் அனுப்பிவைக்கப்படவிருப்பதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ப)

### சிகை ஒப்பனையாளர் சங்க புதிய பணிமனை திறப்பு

(கொக்குவில்)

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் புதிய பணிமனை- வைத்தியசாலை வீதி, 776 ஆம் இலக்க கட்டடத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

பிரதம விருந்தினர்களாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தொழிற்சங்கப் பொறுப்பாளர் இமையாணனும், நல்லூர், யாழ். கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரனும் கலந்துகொள்வார்.

மங்களவிளக்கை சங்கத் தலைவர் ஸ்ரீராஜன் ஏற்றிவைத்து நிகழ்வை ஆரம்பித்து வைப்பார். (206)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண்ணுக்கு மூன்று வருட கடூழியச் சிறைத்தண்டனை

சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண்ணொருவருக்கு, மூன்றுவருட கடூழியச் சிறைத்தண்டனையும், ஒன்றரை இலட்சம் ரூபா தண்டப்பணமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் பூநாறி மடத்தடியைச் சேர்ந்த பெண்ணொருவருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகள் நேற்றுமுன்தினம் யாழ். நீதவான் நீதிமன்றில் நடைபெற்றன.

சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்தமை, பதினைந்து லீற்றர் சட்டவிரோத வடிசாராயத்தையும், அதனை உற்பத்தி செய்வதற்கான உபகரணங்களையும் தம்வசம் வைத்திருந்தமை போன்ற மூன்று குற்றச்சாட்டுக்கள் - இந்தப் பெண்மீது சுமத்தப்பட்டிருந்தன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் ஒவ்வொன்றுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாப்படி, ஒன்றரை இலட்சம் ரூபா தண்டப்பணமும், ஒரு குற்றத்திற்கு ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனைப்படி, மூன்றுவருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்படடுள்ளது.

தண்டப்பணத்தைச் செலுத்தத் தவறும் பட்சத்தில், மேலும் மூன்று வருட சிறைத்தண்டனை விதிக்கப்படுமெனவும் நீதிவான் இ.த.விக்னராஜா தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். (ச)

# பஸ்ஸில் கடலுணவுகள் பயணிகள் அசௌகரியம்

தீவகத்திலிருந்து யாழ். நோக்கிப் பயணிக்கும் தனியார் சிற்றூர்திகளில், பயணிகளுடன் சேர்த்து கடலுணவுகளும் ஏற்றப்பட்டு வருவதால், அதில் பயணிக்கும் பயணிகள் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதாவது ஊர்காவற்துறை, புங்குடுதீவு, வேலணை ஆகிய பகுதிகளிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும் தனியார் சிற்றூர்தி சேவைகளில் - மீன், கருவாடு, நண்டு, இறால் எனப் பலவகையான கடலுணவுகளை, பயணிகளுடன் சேர்த்து ஏற்றுவதால், அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் மாணவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகஸ்தர்கள் எனப் பலரும் பலவிதமான கஸ்டங்களுக்குள்ளாக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (44)

### ஆசிரிய ஆலோசகர் தெரிவுப் பரீட்சை

யாழ். மாவட்ட ஆசிரிய ஆலோசகர்களுக்கான தெரிவுப் பரீட்சை - நாளை மறுதினம் காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. பாட்சைக்குத் தோற்றவுள்ள அனைத்து ஆசிரியர்களையும் உரியநேரத்தில் பரீட்சை மண்டபத்துக்கு சமுகமளிககுமாறும், இதற்கான பரீட்சை அனுமதி அட்டைகள் யாவும- பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.(ப)

### கிட்டு நினைவுதினம் அனுஷ்டிக்க ஏற்பாடு

(வண்ணை)

கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் 11 ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் - வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள தீருவில் தூபியடியில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிககு இடம்பெறவுள்ளன.

வல்வை மருதடிச்சந்தியிலிருந்து மாவீரர்களின் உருவப்படம் ஊர்வலமாக எடுத்து வரப்படும்.

தொடர்ந்து பொதுச்சுடர் ஏற்றல், தேசியக்கொடி ஏற்றல், நினைவுக்கல் திரைநீக்கம், ஈகச்சுடர் ஏற்றல், மலர்மாலை அணிவிப்பு, அகவணக்கம், மலரஞ்சலி மற்றும் தலைமையுரை, நினைவுரை, சிறப்புரை ஆகியன இடம்பெற்று, கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழீழ மகளிர் இசைக்குழுவினர் அன்று முதன்முறையாக யாழ். குடாநாட்டில் மேடையேறவுள்ளதாக ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்தனர். (111)

வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஒன்பதாவது அகவையில்



பெயர் : தி.சரண்யா
முகவரி : 'அகிலம்', கொற்றாவத் தை.

ஒன்பதாவது அகவையில்



பெயர் : வி.சிவாஸ்கரன்
முகவரி : இந்திராபுரம், பளை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :------------------
முகவரி :------------------
பிறந்த ஆண்டு :------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------
பெற்றோர் ஒ




# வாழ்வோட்டத்தில் கலை பல வடிவங்களாக...

**கழிவுப்பொருட்கள்மூலம் பல நேர்த்தியான கலைப் படைப்புக்களை மேற்கொண்டுவரும் மயிலையூர் தியாகராஜாவை தற்காலிக இல்லத்தில் தொழில் மலருக்காக சந்தித்தோம். ஓய்வுபெற்ற புகையிரத நிலைய ஊழியரான சிதம்பரம் தியாகராஜா - தனது கலைப்படைப்புக்களைப் பற்றியும், தனக்கு ஓவியம், சிற்பம் மீதுள்ள ஈடுபாட்டையும் மனம் திறந்து எம்முடன் பகிர்ந்து கொண்டார்.**

உங்களைப்பற்றி கூறுங்கள் என நாம் செவ்வியை ஆரம்பிக்கையில் -

நான் மயிலிட்டிகரை - காங்கேசன்துறையைச் சேர்ந்தவன். தற்போது உடுவில் - மானிப்பாயில் வசித்து வருகின்றேன். சிறுவயது முதலே நான் ஓவியத்துறையில் மிகுந்த ஈடுபாடுடையவன். இதன் காரணமாக சிற்பத் துறையிலும் எனது கவனம் திரும்பியது. இவ்வாறு எனக்கு கலை மீதிருந்த விருப்பினால், எனக்கு கிடைக்கின்ற ஓய்வு நேரத்தில் பலவகையான உருவங்களை வடிவமைத்து வருவதுடன், ஏனையோரிற்கும் அவர்களின் கலை ரசனை உருவத்தேவைக்கேற்ப உருவங்களை செய்து வருகின்றேன் எனச் சுருக்கமாகப் பதிலளித்தார்.

கலைத்துறையில்தொடர்ந்து இருப்பது பற்றியும், உங்கள் படைப்புக்கள் பற்றியும் எம்முடன் பகிர்ந்து கொள்வீர்களா என்றதும் -

எனக்கு இயல்பாகவே கலைமீது மரியாதையுடன்கூடிய ஆர்வம் இருந்ததன் காரணமாகவே, எனது 12 ஆவது வயதில் ஒரு முருகன் சிலையை வடிவமைத்தேன் இந்தச் சிலை எமது குடும்ப அளவில் பெருவரவேற்பைப் பெற்றது.

1954 ஆம் ஆண்டு - நடேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற ஓவியக்கண்காட்சியில் பங்குபற்றினேன். இதில் பெறுமதியான பரிசினையும் வென்றேன். இது எனது 16 ஆவது வயதில் இடம்பெற்றது. இவ்வாறு ஒரு சில போட்டிகளில் பங்குபற்றினேன். களிமண்ணில் உருவங்களை வடிவமைத்து, அவற்றிற்கு வர்ணம்பூசி, அதன் அழகை ரசிப்பதுடன் ஏனையோரிடமும் அவற்றைக்காட்டி மகிழ்ச்சி அடைவதுண்டு.

எனது உருவ அமைப்புக்கள் பெரும்பாலும் கழிவுப் பொருட்களாலேயே முழுமை பெறுகின்றது.

உருவ அமைப்புக்களுக்கான மூலப்பொருட்களையும், வடிவமைப்பு முறைகளையும் கூறுவீர்களா? -

ஆம், தேவைப்படும் பொருட்களாக சிமெந்து வெற்றுப் பைகள், சோடாப் போத்தல்கள், வைக்கோல், நூல், பூச்சி உருண்டைகள், கோதுமைமா இவற்றுடன் தேவைக்கேற்ப வர்ணங்களையும் பிரயோகிக்கலாம். இவற்றைக் கொண்டு பெறுமதிமிக்க உருவங்களை வடிவமைத்துக் கொள்ளலாம்.

தெய்வங்களின் உருவங்கள் - மான், கிளி, பாம்பு, மாடு எனப் பலஉருவங்களைத் தேவைக்கேற்ப அமைத்துவருகிறேன். எமக்குத் தேவையான உருவத்தை வடிவமைக்கும் போது, முதலில் வைக்கோலினால் உருவ அமைப்பை வடிவமைப்பேன். இதன்பின்னர் பசையை கடதாசியில் நனைத்து உருவத்தின்மேல் ஒட்டி அதன் வடிவத்தை மெருகூட்ட வேண்டும்.

உருவங்களைப் பூச்சி அரிக்காமல் பூச்சி உருண்டைகளையும் பாவித்து வருகின்றேன். இதன் பின்னரே வர்ணப்பூச்சை மேற்கொள்வேன். இவ்வாறே ஒரு உருவத்தை முழுமை பெறச் செய்வேன்.

இடப்பெயர்வுகள் உங்கள் கலை முயற்சியில் தாக்கங்களை ஏற்படுத்தியதா? - ஆம்.

எனது பெறுமதியான பல உருவங்கள் அழிக்கப்பட்டன. உருவ அச்சுக்கள் மூலப்பொருட்கள் என அனைத்தையும் இடப்பெயர்வால் இழந்தேன். எனது படைப்புக்களையும் படைப்புக்களுக்கான மூலங்களையும் இழந்தேனேதவிர, எனது கலை ஆர்வத்தயையும், கலைமீதுள்ள பற்றுறுதியையும் இழந்து கொள்ளவில்லை. இருந்தபோதிலும் உளரீதியான ஒரு வகைத் தாக்கமுற்றேன்.

அருமையான இந்தக் கலையை விருத்திசெய்ய அல்லது ஏனையோரிற்குப் பயிற்றுவிக்க எண்ணியுள்ளீர்களா? என வினாவியதற்கு -



நான் இதனை ஒருதொழில் முயற்சியாக மேற்கொள்ளவில்லை. மாறாக பொழுது போக்காகவே மேற்கொண்டுவருகின்றேன்.

ஆர்வமுள்ள எவரும் முன் வந்தால், பூரணமாக இந்தக் கலையை, வடிவமைப்பு நுணுக்கங்களையும் சொல்லிக் கொடுககலாம். ஆனால், யாரும் முன்வருவதில்லை. இந்த உருவ அமைப்பை அதிலும் கழிவுப் பொருட்கள் மூவலமாக உருவங்களை வடிவமைக்கும் இந்தக் கலையை அழியவிடக் கூடாது என்பதற்காகவே தொடர்ந்து ஈடுபட்டு வருகிறேன்.

ஒருவர் கலையை ரசிக்க, மதிக்க தன்னைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். இதன்மூலமாகவே எந்த ஒரு கலைக்குள்ளும் நுழையமுடியும். ஆனால் இன்றைய இளம் சமூகத்தினரிடையே இவ்வாறான அணுகு முறை குறைவாகவே காணப்படுகின்றது. இந்தநிலை மாற வேண்டும். கலையைக் கலைக்குரிய இடத்தில் வைப்பது போல, அதன் பக்குவத்தை உணர்ந்து, உள்வாங்கக் கூடியவர்கள் முன்வரவேண்டும்.



செவ்வியை நிறைவுசெய்யும் நோக்கில் இந்தக் கலை வடிவமைப்பு தொடர்பாக இறுதியாக நீங்கள் என்னகூற விரும்புகிறீர்கள் என்பதற்கு - இந்தக் கலையை அழிய விடாது, எல்லோரும் பழகவேண்டும். இவ்வளவு காலமும் வெளியே கண்காட்சிகள் வைக்கவில்லை. இவ்வாறான ஒரு செயற்பாடு இடம்பொறுமாயின், இது எனது கலை தொடர்பான செயற்பாடுகளை ஏனையவர்கள் விளங் கிக் கொள்வார்கள்.

அதன்மூலமாக இந்தக் கலையைப் பயிலத்தூண்டலாம். பாரம்பரிய கலைகள் - கலைஞர் தங்களுடனேயே தமது செயற்பாடுகளை வைத்துக்கொள்கிறார்கள். இவர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான வசதிகளை மேற்கொள்ளவேண்டும். இப்படியான ஒரு செயற்பாடு இடம் பெற்றாலும், எனது கலையை ஏனையோர் அறிந்துகொள்ள முடியும். இதன் மூலமாக அவர்களுக்கு ஆர்வம் ஏற்படும்.

கழிவுப்பொருட்களைக் கொண்டு, உருவாக்கப்படும் இந்த வடிவங்கள் - மிகக்குறைவான செலவிலேயே இறுதிவடிவம் பெறுகிறது. இதனை யாரும் பழகி தொழில் ரீதியாக மேற்கொள்வார்களாயின், நிலையான ஒரு தொழில் நிறையவருமானம் பெறலாம். என்பது எனது கருத்து. பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தினர் - பத்து கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வில் - என்னையும் ஒருவராக தெரிவு செய்துள்ளனர்.

இப்படியான செயற்பாடுகள் கலைப்படைப்புக்களுக்கும் கலைஞர்களுக்கும் இடம் பெற வேண்டும் என்பதே எனது விருப்பம்.

இவ்வாறு பல கருத்துக்களையும், தனது கலை அமைப்பு தொடர்பான ஆதங்கங்களையும் மிக நிதானமாக முன்வைத்த - தியாகராஜாவிடமிருந்து கழிவுப் பொருட்கள் மூலமாக வடிவமைக்கும் உருவங்கள் பற்றியதான பல இனிய கருத்துக்களைப் பெற்ற திருப்தியில் செவ்வியை நிறைவுசெய்தோம்.

**நேர்காணல்**
**காவலூர் விஜேந்திரன்**

## வாரம் ஒரு சிறுதொழில்

### கற்றாழை நாரிலிருந்து தூரிகை செய்யும் முறை

### தூசு துடைக்கும் பிரஷ்

**(சென்றவாரத் தொடர்ச்சி...)**

**இந்தவகையான பிரஷ்களை நீலம், பச்சை, வெள்ளை, ஊதா போன்ற நிற நார்களில் தயாரித்தால் அழகாகவும், பார்வையாகவும் இருக்கும்.**

**இந்த பிரஷின் மொத்த நீளம் 35 செ.மீ இருந்தால் போதுமானது. இதனைத் தயாரிக்க உருளையான கட்டை, தோல்ப்பட்டை, நூல் என்பன தேவைப்படும். இதனைத் தச்சுத் தொழிலாளியிடம் சொல்லித் தயாரித்துக் கொள்ளலாம். பின்னர் சாயம் ஏற்றப்பட்ட நாரை எடுத்து 20 செ.மீ நீளம் அளவில் துண்டுகளாக்கிக் கொள்ளவேண்டும். அதன் பின் ஒரு உருளைக்கட்டையை எடுத்து அதன் நுனிப்பக்கத்தில் வெட்டிய நாரில் ஒரு கைபிடியளவு எடுத்து, அந்த நார்க்கட்டையை சுற்றிலும் 1/2 செ.மீ மொத்தத்தில் வரும்படி செய்து, உருளைக்கட்டையின் நுனியிலிருந்து 2 செ.மீ நீளம் விட்டு நூலினால் இறுக்கிச்சுற்ற வேண்டும். சுற்றியபின் நூலை முடிந்துவிட்டு வெட்டிவிடவும்.**

**அதன் பின் நூல்கட்டு மறையும்படி இந்த நாரை முன் பக்கமாக இழுத்து விடவும். உருளைக்கட்டையை மேற்பக்கம் பிடித்துக்கொண்டு, எல்லா நாரும் ஒரே அளவில் தொங்கும்படி கையினால் அழுத்தி, கீழ்நோக்கி உருவி விடவேண்டும். பின்னர் எடுத்துவைத்திருக்கும் தோல் நாடாவை (ஏதாவது தோல் பைகளில் இருந்து எடுக்கப்பட்டது) 1/2 செ.மீ அகலத்தில் நீளமாக வெட்டி வைத்துக்கொள்ள வேண்டும். பின்னர் தோல் நாடாவை நாரின் உட்பக்கமாக கட்டப்பட்ட நூல்கட்டுக்கு மேல் வரும்படி வைத்து, தோல் நாடாவின் ஒரு முனைக்குமேல் மறு சுற்று தோல் ஒன்றின்மேல் ஒன்று வருமிடத்தில் அழுத்திப் பிடித்து, ஒரு ஆணியை வைத்து இறுக்கி விடவேண்டும். பின்னர் தோல்நாடா இணைந்திருக்கும் இடத்தில் 1 செ.மீ நீளம் விட்டு தோலை வெட்டிஎடுத்துவிடவேண்டும். தோல் வெட்டிய இடத்தில் அந்த தோலிற்குமேல் (1செ.மீ தோல்) இரு முனைகளுக்கும் இரண்டு ஆணிகள் வைத்து இறுக்கி விடவேண்டும். அதன் பின்னர் பெரிய பற்கள் உள்ள சீப்பை எடுத்து இந்த நாரை நன்றாகச் சீவி கூந்தல்போல செய்து, அடி மட்டம் ஒரே அளவில் இருக்கும்படி கத்தரிக்கோல் கொண்டு வெட்டிவிட வேண்டும். விரும்பினால் ஒரு தோல் நாடாவை எடுத்து பிரஷின் மறுமுனைக்கு ஒரு பிடியையும் செய்து கொள்ளலாம். இது அதனை ஒரு இடத்தில் கொளுவிவைக்க சௌகரியமாக இருக்கும்.**

**(அடுத்தவாரம் சைக்கிள் சில் சக்கரப் பிரஷ் செய்யும்முறை பற்றிப் பார்போம்).**

# சுவைக்கும் மாங்கனியைத்தரும் மாமரத்தின் பெரும் பயன்கள்

மாங்கொட்டை, மாவிலை போன்றவற்றைப் பயன்படுத்தி-சிறியளவிலான தொழிலை எப்படி அமைக்கலாம் -

மாங்காய் பழுத்துவிட்டால் கிடைக்கும் பழங்களைச் சாப்பிட்டுவிட்டு, கொட்டையை எறிந்து விடுவதுதான் நமது வழமை. மாங்காய் என்ற ஊறுகாய்வகையில்-மாங்கொட்டையும் உப்பில் ஊற விடப்படுகின்றது. இந்த மாங்



கொட்டையைத் தட்டி, குழம்பு வைப்பதுமுண்டு. நாட்டு வைத்தியத்திலும், கை வைத்தியத்திலும் மாங்கொட்டை பயன்படுத்தப் படுகிறது. இவையெல்லாம் உங்களுக்குத் தெரியுமா? இன்றுதான் அறிகிறேன் என்று மூக்கின்மேல் விரலை வைக்கின்றீர்களா? சரி இனியாவது தெரிந்துகொள்வோமே.

ஒரு பெரிய நகரத்தில் எறியப்படும் மாம்பழங்களின் கொட்டைகளை நினைத்துப் பாருங்கள். எத்தனை ஆயிரம் தொன் மாங்கொட்டைகள் கிடைக்கும். மாம்பழத்தின் தசைப்பகுதியைத் தனியாகப் பிரித்தெடுத்து, மாம்பழ ஜாம், பாகு போன்றவை தயாரிக கும் சிறிய நிறுவனங்களில்கூட ஒரு தொன்னுக்கு மேல் மாம்பழக் கொட்டைகள் கிடைக்கும்.

மாங்கொட்டைக்குள் இருக்கும் மாம்பருப்பு - இரும்பைக் கரைக்கும் திறன்கொண்டது.

ஒரு கிலோ மாம்பருப்பை எடுத்துக்கொள்ள வேண்டும். மாம்பருப்பு சுத்தமானதாக இருக்க வேண்டும். பருப்பின் மேலே ஒட்டியிருக்கும் சவ்வு முதலியவற்றை முற்றாக அகற்றிவிடவேண்டும். இந்தத் தூய்மையான பருப்பைக் கொஞ்சம் தண்ணீர்விட்டு, மை போல அரைத்துக்கொள்ள வேண்டும், பின்னர் - ஒரு வாயகன்ற பாத்திரத்தில் இந்த மாங்கொட்டைக் கூழை ஊற்றவேண்டும்.

இரும்புத் தூளை Lathe (கடைச்சல்) பட்டறைகளில் இரும்பை அறுக்கும்போதோ, உராவும்போதோ பெற்றுகொள்ள லாம். இந்தத் தூளில் 50 கிராம் அளவு எடுத்து, ஏற்கனவே யுள்ள மாம்பருப் புககூழில் போட்டு நன்றாகக் கிளறிவிட வேண்டும். இந் தக் கலவையை அப்படியே தூக்கி வெயிலில் வைக்க வேண்டும். இரணடு மணிநேரத்திற் கெல்லாம் கூழின்மீது கருநீலமான திரவம் தோன்றும். இது வேறு எதுவும் இல்லை. மாம்பருப் புக்கூழில் இரும்பு கரைவதால், இந்த நீலநிறத் திரவம் கிடைக்கிறது.

இப்படியே ஒருநாள் முழுவதும் வெயிலில் மாம்பருப்புக்கூழை வைத்திருந்த பின்பு, நல்ல துணியில் வடிகட்டிவிட்டு பின்னர் அதேதிரவத்தை பில்டர் பேப்பர்களின்மூலம் மீண்டும் வடித்து எடுத்துக் காயவிட வேண்டும். இப்படிக் காயவிடப்பட்டால், அடர்த்தி அதிகமாகும். பாகு நிலையை அடைந்துவிடும், இந்தப் பாகினைத் துணிகளுக்குச் சாயமேற்றப் பயன்படுத்தலாம். இந்தப் பாகு போன்ற திரவத்தைப் போல்ட்பெயினற் பேனாக்களில் நிரப்புவதும் எளிது. நிரப்பி எழுதப்பயன்படுத்தலாம்.

மாம்பருப்பிலிருந்து கெட்டியான கொழுப்புப் பொருளான வெண்ணெய்யையும் பெறலாம். மாம்பருப்பிலிருந்து கொழுபபைப் பிரித்தெடுப்பதற்கு, சோல வெண்ட் எக்ஸ்ட்ராக்சன் (Solvent Extraction) முறையே சிறந்தது. இநத மாம்பழ வெண்ணெய்யச் சந்தை வட்டாரங்களில் Mongo Seeds Oil என்றும், Mango Badder என்றும் கூறுவார்கள்.

மாம்பழ வெண்ணெய் - கொககோ வெண்ணெய் போன்று சாம்பல் நிறத்திலிருக்கும் இதன் வாசனை - மாம்பழ வாசனையைப் போலவே இருக்கும். அதனால், சிலர் இந்த வாசனையை விரும்பமாட்டார்கள். இந்த வெண்ணெய்யைக்கொண்டு தரமான சவர்க்காரங்களையும் தயாரிக்கலாம்.

இந்தச் சவர்க்காரங்கள் - சருமநோய்க்குச் சிகிச்சை முறையாகவும் பயனபடும். மாம்பருப்புக் கொழுப்பைப் பயன்படுத்திச் செய்யப்படுகன்ற சவர்க்கார வகைகளைத் தயா ரிக்கும்போது, சிலவகை இயற்கை வெண்ணெய்களையும் பயன்படுத்தினால் சவர்க்காரம் மிகவும் தரமுள்ளதாக இருக்கும்.

வீடுகளில் மாம்பருப்பு ஒரு மருந்துப் பொருளாகவும் பயன்படுத்தப் படுகிறது. மாம்பருப்பை நன்றாகக் காயவைத்து, பொடிசெய்து சாப்பிட்டால், இரத்தமூலம் கட்டுப்படும். எனினும, இந்தவியாதியை இந்தப் பொடி முழுவளவில் குணப்படுத்தும் என்றும் கூறமுடியாது.

### மாம்பூ

மாமரங்களிலிருந்து உதிரும் பூக்கள் - தரையில் மெத்தைபோல் பரவிக் கிடக்கும். இந்தப் பூக்களைக் காய்வதற்குமுன் சேகரித்து - Steam Distiliation முறையில் பிரிக்கும்போது, பூவிலிருந்து ஒருவித எண்ணெய்யைப் பெறலாம். பூவின் எண்ணெய் நல்ல வாசனையுடையது. இந்த எணணெய் சென்ட் தயாரிப்பதற்கான ஒரு மூலப்பொருளாகும்.

எண்ணெயைப் பிரித்து எடுத்தபின் எஞ்சியுள்ள பூவை நன்றாகக் காயவைத்து, தூளாக அரைக்கவேண்டும். இந்தத் தூள் சீதபேதியைக்கூட கட்டுப்படுத்தும்.

இந்த மாம்பூ எண்ணெயைத் தேங்காய் எண்ணெய்யுடன் கலந்து தலைக்குத் தேய்த்தால், தலையிலுள்ள ஈரும்பேனும் ஒழிந்துவிடும்.



### மாவிலை

மாவிலைச் சாம்பலை மண்ணெண்ணெய்யுடன் கலந்து பூச்சிகொல்லி மருந்தாக, மாமரத்திற்கே விசிறலாம். இன்னும் பல பொருட்களை மாவிலையிலிருந்து தயாரிக்கலாம்.

மாவிலைகள் - தோரணம் கட்டவும், ஆடு மாடுகளின் உணவாகவும் மட்டும் இருப்பவை என்று கருத வேண்டியதில்லை. அவற்றிலிருந்து சிறந்த மருந்துகளைத் தயாரிக்கலாம்.

தினசரி ஐந்து இளம் மாந்துளிர்களைச் சாப்பிட்டால் நீரிழிவுநோய் கட்டுப்படும்.

மாமரத்தடியில் குப்பை என ஒதுக்கப்படும் இலை, சருகு, மாங் கொடடை என்ப னவற்றில் எவ்வளவு நன்மைகள் இருக்கின்றன என்று பார்த்தீர்களா? தெரிந்துகொள்வோம், செயற்படுவோம்.

✣✣✣

# இனிப்பின் உறைவிடம் கரும்பு

(சென்றவாரத் தொடர்ச்சி...)

இந்த விடயத்தில் நல்ல தேர்ச்சியும் அனுபவமும் தேவை.

கரணைகளை வெட்டித் தயாரிக்கும்போது, ஒவ்வொரு துண்டிலும் குறைந்தது 3 மொட்டுக்கள் இருப்பது நல்லது. சாலுக்குச் சால் இருக்கும் இடைவெளி மண்தரத்தினைப் பொறுத்து இருக்கும். நிறைந்த விளைச்சலைத்தரும் உயர்ந்த ரகங்களைச் சிறிது எட்டவாக நடுவதே நல்லது. இவ்வாறு பார்க்கும்போது, ஒரு ஏக்கர் கரும்பு நடுவதற்கு 10 ஆயிரம் தொடக்கம் 16 ஆயிரம் வரையிலான கரணைகள் தேவை. ஆகவே, சால் நடவு - எமது சூழ்நிலைக்கு மிகவும் சாத்தியமான தாகும்.

### பசளைப் பிரயோகமும் களை அகற்றலும்

நட்டபயிர் முளைத்தபின், அடுத்ததாக களை அகற்றப்படவேண்டும். இது நட்டு ஒரு மாதத்தின்பின், செய்யப்படல்வேண்டும். மாட்டெரு, கூட்டெரு, பிண்ணாக்குப் போன்றவற்றைக் கரும்பிற்கு பசளையாக இடலாம்.

சால்களுக்கு நடுவே, மேட்டுநிலங்களின் பசுந்தாள் பயிர்கள் நடப்படுவது ஓர் சிறந்தமுறையாகும். சால்களில் கரும்பு நடும்தருணம் சணல் விதைகளை மேட்டின் அருகில் சால்களுக்கருகே விதைக்கலாம். ஏறத்தாழ 21/2 மாதங்களின்பின், சணலினை அறுவடைசெய்து அந்த மண்ணிலேயே புதைத்து விடவேண்டும்.

2 ஆம், 3 ஆம் மாதங்களில் கரும்பிற்கு மண் அணைக்கப் படவேண்டும். இதன்பின், இரண்டு மாதத்திற்கொருதரம் மண் அணைக் கலாம். இவ்வாறு 3 - 4 தடவைகள் மண்ணணைக்கப்படவேண்டும்.

கரும்புச் செடியில் வேர்கள், ஆழமாக ஊடுருவுவதில்லை. பூமி மட்டத்தின் அண்மையிலேயே பரவுகின்றன. கரும்பு முற்ற முற்ற செடியின் பழுவைத் தாங்க முடியாமல் பலவீனப்படுகின்றன. அதுவும் ஒரு சிறு காற்றடித்தாலும் செடிகள் சாய்ந்து விழுந்துவிடும். மண்ணணைப்பு இதனைத் தடுக்கவும், குறைக்கவும், உபயோகமாகிறது.



மண்ணணைப்பு செய்தால் மட்டும் போதாது. ஆங்காங்கே மூங்கில்களைக் குறுக்கே ஊனறி, குலைபோட்ட வாழைகக்கு முட்டுக் கொடுப்பதுபோல, தாங்கவிடுதல் வேண்டும். இதை திருப்திகரமாகச் செய்வதற்கு ஒரு ஏக்கருக்கு, 40 ஆயிரம் மூங்கில்கள் தேவையாய் இருக்கும். இங்கு மூங்கில்கள் ஒரு நிரந்தரச் செலவாகும். கரும்பு அறுவடையானதும், விவசாயிகள் மூங்கில்களை எல்லாம் சேகரித்து வைப்பார்கள். ஆண்டுதோறும் மூங்கில் செலவில்லை. நடுவதற்கும், கட்டுவதற்கும் வேண்டிய கூலிச்செலவுதான் ஏற்படும்.

### இலை சுற்றுதல்

6 ஆவது மாதத்திலிருந்து, கரும்பின் அடியிலிருந்து ஒவ்வோர் இலையாக, கரும்பைச் சுற்றிக்கொண்டே வந்து, ஆங்காங்கே செருகிவிடவேண்டும். கரும்புகளெல்லாம் போர்வைகொண்டு மூடியதுபோல் தென்படும். இவ்வாறு இலை சுற்றுதல் 6 ஆவது மாதத்திலிருந்து, 4 அல்லது 5 முறை செய்ப்படவேண்டும். அத்துடன், அருகிலிருக்கும் கரும்புத் தூறுகளை இலைகளைக் கொண்டே முறுக்கி ஒன்றாகச் சேர்த்துவிடவேண்டும். இந்தச் செயன்முறையினாலும், கரும்புகள் சாய்ந்து விழாமல், ஒன்றுக்கொன்று ஆதாரமாக இருக்கும்.

இலை சுற்றுவதால், பூஞ்சண நோய்கள் பரவாமல் தடுக்கப்படுவதுடன், ஏனைய நோய் உண்டாக்கும் கிருமிகளையும் கட்டுப்படுத்துவதாக அமைகிறது. அத்துடன், புயல் அடிக்கும்போது, காற்றானது தாராளமாக உடுருவிச் செல்வதால், "தாழ்ந்து, கொடுத்து வெற்றியடையும்" என்பதற்கிணங்க கடும் சூறாவளியையும் தடுக்க இலை சுற்றல் உதவுகிறது.

### அறுவடை

கரும்பு முற்றி அறுவடைக்குத் தயாராகிறது என்பதற்கு ஓர் அறிகுறி இலைகள் பசுமைமாறி, மஞ்சள் நிறம் கொள்வதேயாகும். அறுவடைசெய்யமுன், அடியிலுள்ள உலர்ந்த இலைகள் முதலில் அகற்றப்படவேண்டும். கரும்பைவெட்டும்போது எவ்வளவு அடியில் முடியுமோ அவ்வளவு அடியில் வெட்டவேண்டும். ஏனைய இலைகளைப் பின்பு அகற்றிவிடவேண்டும். இந்த இலைகளை மாட்டுத்தீவனமாக உபயோகிக்கலாம்.

### விளைச்சல்

நல்ல முறையில் முகாமைத்துவம் இருக்கும்போது ஓர் ஏக்கரிற்கு சுமார் 30-50 தொன்கள்வரை அறுவடைகிடைக்கும்

### நீர்த்தேவை

கரும்பிற்கு மழை உட்பட ஏறத்தாழ 70-80 அங்குலம் வரை நீர் தேவை. பயிரிற்கு 10 தினங்களிற்கொருமுறை நீர் பாய்ச்சுவது சிறந்தது. ஒவ்வொரு பாய்ச்சலிலும் 2-3 அங்குலம் நீர் கொடுக்கவேண்டியிருக்கும். பல ஆராய்ச்சி முடிவுகளிலிருந்து 30-35 தொன்கள் கரும்பு கொடுக்ககூடிய பயிர். இந்தச் சத்துக்களில் முறையே 70 இறாத்தல் நைதரசன் 60 இறாத்தல், பொசுபரஸ் 200 இறாத்தல் பொட்டாசியத்தை எடுக்கிறது. இந்தச் சத்துக்களை நிலத்திற்கு திருப்பியளித்தல் மிகவும் இன்றியமையாததாகும்.

ஒரே தடைவையில் பசளையை அளிப்பதை விட, 2 அல்லது 3 தடவைகள் அளிப்பது சிறந்தது. இயற்கை உரங்களையும் செயற்கை உரங்களையும் கலந்தளிப்பது நல்லது.

கரும்பு நடமுன் 20 வண்டி மாட்டெரு மண்ணோடு கலக்கப்படல் வேண்டும். அத்துடன் சால்களுக்கு செயற்கை உரங்களைத் தூவ வேண்டும். இதற்கு 50 இறாத்தல் $(NH_4)_2 SO_4$, 50 இறாத்தல் $(NH_4)_3PO_4$ பாவிக்கலாம். 2 மாத்திற்குப் பின் 5000 இறாத்தல் பசுந்தாள், 250 இறாத்தல் பிண்ணாக்கு, 50 இறாத்தல் $(NH_4)_2 SO_4$ கலந்த கலவையை மண்ணுடன் சேர்த்து விடல்வேண்டும்.

(தொடரும்...)

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 70/= | 80/= | 90/= | 70/= | 80/= | 60/= | 60/= |
| வெண்டிக்காய் | 30/= | 50/= | 60/= | 40/= | 40/= | 30/= | 40/= |
| உருளைக்கிழங்கு | 65/= | 75/= | 80/= | 70/= | 80/= | 65/= | 70/= |
| கத்தரிக்காய் | 30/= | 45/= | 60/= | 30/= | 40/= | 30/= | 30/= |
| பாகற்காய் | 60/= | 80/= | 80/= | 70/= | 60/= | 60/= | 50/= |
| கரட் | 40/= | 45/= | 60/= | 40/= | 60/= | 39/= | 40/= |
| பீற்றூட் | 30/= | [illegible] | 60/= | 40/= | 40/= | 30/= | 60/= |
| வெங்காயம் | 40/= | 40/= | 50/= | 50/= | 60= | 40/= | 40/= |
| பச்சை மிளகாய் | 50/= | 60/= | 70/= | 50/= | 60/= | 40/= | 50/= |

பொங்கல் நாள் சிறப்புக் கட்டுரை - திருமகள்



# இயற்கைக்கு விழா எடுக்கும் உழவர்களின் திருநாள் இன்று

**தை** முதல்நாள் தமிழர்களின் திரு நாள். உழவர்களின் பெருநாள். தமிழர்கள் இயற்கைக்கு விழா எடுக்கும் இனிய நாள். அல்லவை கழிந்து நல்லவை மலரும் இன்பநாள்.

களனி திருத்தி, வயல் உழுது, எரு இட்டு, வரப்புக் கட்டி, நீர் பாய்ச்சி, நெல் விதைத்து, களை எடுத்து, விளைந்த நெல் மணிகளின் பாரம் தாங்கமுடியாமல் தலை சாய்ந்துபடுத்த கதிர்களை நல்லநாள் பார்த்து ஒரு கைப்பிடி அரிந்து தாம்பாளத்தில் வைத்து வீட்டுக்கு எடுத்துவந்து, வீட்டு வாசலில் கட்டித் தொங்கவிடுவார்கள். இதற்குப் புதிர் எடுத்தல் என்று பெயர். அதில் கொஞ்ச நெல் மணிகளை எடுத்து குத்தி அரிசியாக்கி அந்தப் புத்தரிசியை பழைய அரிசியோடு கலந்து மஞ்சளும், இஞ்சியும் கட்டிய புதுப்பானையில் பாலும் சர்க்கரையும், பாகும் பருப்பும் இட்டுப் பொங்கி இயற்கைத் தெய்வமான ஞாயிறுக்குப் படைத்து வீட்டுத் தலைவனும், தலைவியும் பிள்ளைகளும் கொண்டாடி மகிழும் விழாவே பொங்கல் நாள்! இது தமிழர்களுக்கே உரித்தான திருநாள்!

பொங்கல் விழாவிற்கு சில வாரங்கள் கழித்தே அரிவுவெட்டு இடம்பெறும். வெட்டிய கதிர்களைக் குவித்து வயலின் நடுவே சூடு வைப்பார்கள். அதன் பின்னரே மாடுகளைக் கொண்டு சூடு மிதிப்பு இடம்பெறும்.

தைப்பூசத் திருநாளில் புதிர் குழைத்தல் இடம்பெறும். புத்தரிசி பொங்கி, சர்க்கரையும் வாழைப்பழமும் சேர்த்துப் படைக்கும் இப்புதிர் சோற்றை சுற்றமும் நட்பும் அயலும் சூழ இருந்து உண்டு மகிழ்வர். அண்மைக்காலமாக இந்த வழக்கம் அருகிவருகிறது.

பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல். உழவர்கள் தமது கமச் செய்கைக்குத் துணையாக இருந்த கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கும் நாளே மாட்டுப் பொங்கலாகக் கொண்டாடப்படுகிறது. இந்த விழா பட்டிப் பொங்கல் என்றும் அழைக்கப்படும்.

பொங்கல் நாளை 'மகரசங்கராந்தி'யாக புராணிகர்கள் மாற்ற முற்பட்டபோதும் அடிப்படையில் பொங்கல் உழவர் விழாவாகவே உயர்ந்தும் நிலைத்தும் வருகிறது.

வயல் உழவும், வண்டி இழுக்கவும், சூடு மிதிக்கவும், பால், தயிர், நெய் கொடுக் கவும், வயலுக்கு எரு தரவும் காரணமாக இருந்த எருதுகளையும், பசுக்களையும், கன்றுகளையும் குளங்களில் குளிப்பாட்டி, குடிக்கக் பச்சையரிசிக் கஞ்சி கொடுப்பர்.

மாலையில் பட்டிப் பொங்கல் பொங்கிப் படைக்கப்படும். மாடுகளுக்கு அப்பொங் கலில் ஒரு கவளம் உண்பதற்குக் கொடுக் கப்படும். பின்னர் மாடுகளின் கொம்புக்கும் நெற்றிக்கும் குங்குமம், சந்தனம் பூசி கழுத்தில் மலர் மாலை, வடை மாலை போன்றவற்றால் அலங்கரித்து வீதிகளில் ஊர்வலம் விடுவார்கள்.

தைப்பொங்கல் திருநாளுக்கு வானியல் அடிப்படையும் இருக்கிறது. தென்திசை நோக்கி பயணம் செய்யும் ஞாயிறு (பூமியில் இருந்து ஆகாயத்தை அண்ணாந்து பார்க்கும்போது) இந்நாளில் வடதிசை நோக்கி பன்னிரண்டு இராசிகளில் ஒன்பதாவது தனு இராசியில் இருந்து மகர இராசியில் புகுகின்றான். ஒரு இராசியில் இருந்து இன்னொரு இராசிக்குப் போக எடுக்கும் காலம் ஒரு மாதமாகும்.

இப்போது வழக்கில் இருக்கும் 'பிரபவ' முதல் 'அட்சய' 60 ஆண்டுப் பெயர்கள் சாலிவாகனன் என்ற அரசனால் கி.பி. 78 இல் அறிமுகப்படுத்தப்பட்டவை ஆகும். இவை வடபுல அரசனால் ஏற்பட்டதால் வடமொழிப் பெயர்கள் வழங்கப்படலாயிற்று.

இந்த ஆண்டு முறையால் தமிழர் மொழி, மரபு, மானம், பண்பாடு, வாழ்வு முதலியவற்றிற்கு விள்ளைந்த அழிவையும், இழிவையும் எண்ணிப் பார்த்த தமிழ் அறிஞர்கள், புலவர்கள், சான்றோர்கள் 1921- ஆம் ஆண்டு சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்க் கடல் மறைமலை அடிகள் தலைமையில் கூடி மாற்று நடவடிக்கைபற்றி ஆராய்ந்தார்கள்.

திருவள்ளுவர் கிறிஸ்த்து பிறப்பதற்கு 31 ஆண்டுகள் முன்பு பிறந்தவர் என்று நிர்ணயம் செய்யப்பட்டு அவர் பெயரில் தொடர் ஆண்டு பின்பற்றுவதெனவும் அதுவே தமிழ் ஆண்டாகக் கொள்வதெனவ்ும் முடிவு செய்யப்பட்டது.

ஆங்கில ஆண்டுடன் 31 ஐ கூட்டினால் வள்ளுவராண்டு வரும். இப்போது ஆங்கில ஆண்டு 2003. எனவே வள்ளுவராண்டு 2034 (2003 சக 31).

எனவே, திருவள்ளுவர் ஆண்டுத் தொடக்கம் தைப் பொங்கல் திருநாளான தை முதல் நாள் தொடங்கி மார்கழிக் கடைசியில் முடிவுறும்.

தமிழ்நாடு அரசு திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்று 1971 முதல் தமிழ்நாடு அரச நாட்குறிப்பிலும், 1972 முதல் தமிழ் நாடு அரசிதழிலும் 1981 முதல் தமிழ்நாடு அரசின் அனைத்து அலுவலங்களிலும் நடைமுறைப் படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டையும் தமிழீழத்தையும் பொறுத்தளவில் ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் பருவமழை (கார்) காலமாகும். பண்டைய காலத்தில் ஆவணி புரட்டாதி மாதங்கள் கார்காலமாகவும் ஐப்பசி கார்த்திகை கூதிர் (குளிர்) காலமாகவும் கணிக்கப்பட்டது.

இப்போது ஆவணி புரட்டாதி மாதங்களில் நல்லநாள் பார்த்து விதைப்பு இடம் பெறுகிறது. சில சமயம் முதல் மழை பெய்த பின்னர் விதைக்கிறார்கள். மழை பெய்யுமுன் ஆவணியில் விதைப்பு விதைப்பதும் உண்டு. இதற்கு புழுதி விதைப்பு என்று பெயர்.

புரட்டாசியில் சிறுகப் பெய்யத் தொடங்கி ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் பருவ மழை பலமாகப் பெய்யும் காரணமாக வயல்களில் தண்ணீர் நிரம்புகிறது. தண்ணீரின் மட்டம் கூடக்கூட பயிரும் ஓங்கி வளரும். சில சமயம் பயிர் சிறிதாக இருக்கும் போது பெரு மழை பெய்து வெள்ளத்தினால் பயிர் அழுகிப்போவதும் உண்டு. அல்லது போதிய மழை இன்மையால் கருகிப்போவதும் உண்டு.

நெல்லை விதைத்தால் நெல்லு மாத்திரம் முளைப்பதில்லை. எருவில் கலந்துள்ள புல்லு மற்றும் கிடச்சிக் கொட்டைகளும் முளைக்கும். அதனை களையெடுப்பதில் கமக்காரர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். அதோடு வெட்டுக்கிளிகள், பூச்சி புழுக்கள் நெற்பயிரைத் தாக்குகின்றன. இந்தப் புழு பூச்சிகளை ஒழிப்பதற்கு இப்போது கிருமி கொல்லி பயன்படுத்தப்படுகிறது.

தை மாசி மாதங்களில் வயல்களில் தண்ணீர் வற்றி கதிர்கள் முற்றி அறு வடைக்குத் தயாராக இருக்கும். வயல்களை உழுது விதைத்துகளை பிடுங்கி, கட்டிக் காத்து உழைத்துப் பாடுபட்டதன் பயனை உழவர்கள் அறுவடை செய்யும் காலம் இதுவாகும்.

ஆன காரணத்தினாலேயே தை மாதப் பிறப்பை உழவர்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். தை பிறந்தால் தங்கள் துன்பங்கள் தீரும் வழி பிறக்கும் என நினைக்கிறார்கள்.

பண்டைய தமிழர்கள் ஒரு ஆண்டினை ஆறு பெரும்பொழுதுகளாகப் பகுத்தனர். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில் முதுவேனில் என்பனவாகும். ஒவ்வொரு பெரும்பொழுதும் இரண்டு திங்களைக் (மாதம்) கொண்டதாக இருந்தது. உரையாசிரியர்களில் ஒருவரான நச்சினார்க்கினியர் ஓராண்டு ஆவணியில் தொடங்கி ஆடியில் முடிந்தது என்கிறார்.

சங்க இலக்கியங்களில் எல்லாத் திங்கள்களின் பெயர்களும் சொல்லப்பட வில்லை. தை, மாசி, பங்குனி சொல்லப்பட்டுள்ளது. ஆனால் தொல்காப்பிய ஆசிரியர் இகர வீற்றுப் புணர்ச்சி, ஐகாரவீற்றுப் புணர்ச்சி ஆகியவற்றில் மட்டுமே 'திங்களும் நாளும் முந்து கிளந்தன்ன' எனக் கூறுவதைக் காணலாம். எல்லாத் திங்கள் பெயர்களும் இந்த இரண்டு எழுத்தில் (இ, ஐ) முடிந்தன என்கிறார். இதிலிருந்து அவர் காலந்தொட்டே இன்று இருக்கும் திங்கட் பெயர்கள் வழங்கி வருகின்றன எனக் கொள்ளலாம்.

பண்டைய காலத்தில் திங்களின் வளர்பிறை தேய்பிறை கொண்டே பெரும்பொழுதைக் கணித்தனர். அதனால்தான் மாதத் தைத் திங்கள் என்று அழைத்தனர்.

திங்கள் ஞாயிற்றைச் சுற்றிவர எடுக்கும் நேரம் 27 நாட்கள், 7 மணி, 43 மணித்துளிகள்.

"உவவுமதி" (முழுமதி) நாளில் ஞாயிறும் திங்களும் எதிர் எதிராக நிற்கும் என்ற வானவியல் உண்மையைப் புறநானூற்றுப் பாடல் (65) தெரிவிக்கிறது.

ஆண்டை ஆறு பெரும்பொழுதாகப் பகுத்தது போலவே ஒரு நாளையும் ஆறு சிறு பொழுதாகப் பகுத்தனர்.

வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை. யாமம் என்பதே அந்த ஆறு சிறு பொழுதாகும். மேலும் ஒரு நாள் 60 நாளிகை கொண்டது என்று கணக்கிட்டனர். ஒரு நாளிகை 24 நிமிடங்களாகும்.

ஞாயிற்றைக் கொண்டு ஆண்டைக் கணக்கிடும் முறை கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வராகமிகிரரால் கொண்டுவரப்பட்டது.

ஞாயிறு வணக்கம் இயற்கை வழிபாட்டைச் சேர்ந்தது. உலக நாகரிகங்கள் எல்லாவற்றிலும் ஞாயிறு வணக்கம் இருந்ததற்குச் சான்றுகள் இருக்கின்றன. உலகில் வாழும் உயிர்களுக்கு ஆதாரமாக ஞாயிறு இருப்பதால் ஆதி மனிதன் ஞாயிற்றை தெய்வமாக உருவகப்படுத்தி வணங்கிப் போற்றி வந்ததில் வியப்பில்லை.

வேத காலத்தில் இந்திரன், வருணன், அக்கினி இவற்றுக்கு ஒப்ப ஞாயிறு தெய்வமாக வழிபடப்பட்டது. இந்து மதத் தின் உட்பிரிவுகளில் ஒன்றான சௌரம் ஞாயிறை முழுமுதற் தெய்வமாக வழிபடும் மதமாகும். பிற்காலச் சோழர் ஆட்சியில் சூரியனுக்குத் தனிக் கோவில்கள் எழுப்பப்பட்டன.

முத்தமிழ்க் காப்பியங்களில் முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள்-

'ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்! காவிரி நாடன் திகிரிபோல் பொன் கோட்டுமேருவலம் திரிதலான்.' (சிலம்பு 1, 4-6) என ஞாயிற்றை வாழ்த்திப் போற்றுகிறார். 'காவிரி ஆற்றையுடைய நாடனாகிய சோழனது ஆணைச் சக்கரம் போன்று பொன் உச்சியை உடைய இமயமலையை வலம் வருதலால் ஞாயிற்றை வணங்கு வோம்! ஞாயிற்றை வணங்குவோம்!'

தமிழர்கள் கொண்டாடும் விழாக்களில், சமயசார்பற்ற எல்லோருக்கும் பொதுவான விழா பொங்கல் திருநாளாகும். பொங்கல் விழாவில் கற்பனைக்கோ, புனைவுகளுக்கோ, அருவருக்கத்தக்க பகுத்தறிவுக்குப் பொருந்தாத கட்டுக் கதைக்கோ இடமில்லை.

தமிழர்கள் கொண்டாடும் தீபாவளி தமிழ் அரசன் ஒருவனைக் கடவுள் அவதாரம் சூழ்ச்சியால் கொன்ற நாளாகும்.

தமிழர் திருநாளான பொங்கல் விழா என்பது வெறும் சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல் உண்ணும் நாளாக இருந்துவிடக் கூடாது. அது எங்கள் உணர்வுகளைப் புதுப்பிக்கும் நாளாகவும் கலை, பண்பாடு, பாரம்பரியம் போன்றவற்றைப் போற்றிப் பாதுகாக்க சூளுரைக்கும் நாளாகவும் இருக்கவேண்டும். ☆

# கசப்பான அனுபவங்களை மறந்து இனிப்பான செயல்களை செய்வோம்

## சர்வதேச குருமார் ஒன்றியம் வாழ்த்துச் செய்தி

2004 ஆம் ஆண்டின் தைப்பொங்கல் திருநாளான இந்நன் நாளிலே், தமிழ் மக்களின் மனங்களிலும் இன்பங்கள் பொங்க அனைத்துத தமிழ் மக்களுக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் அகமகிழ்கின்றோம்.

உழவர் திருநாளான இந்தத் தைத்திருநாளிலே, கதிரவனை வழிபட்டு இறையருளால் இவ்வையகம் இனிதே சிறக்க பல்லுயிரும் பாரினில் பசியின்றி வாழவும், மனித இனம் மாசற்ற இனமாக மலர்ந்திடவும், எமது மண்ணில் நிரந்தர சமாதானம் நிலைபெற்று, பழையன கழிந்து, புதியன புகுந்து நீதியோடு கூடிய நிரந்தர தீர்வையும் அமைதியோடு கூடிய சமாதான வாழ்வையும் தரும் புனிதத் திருநாளாக, இப்பொங்கல் திருநாள் மலர வேண்டியும், சொந்தங்கள்சூழ இன்பங்கள் கூடி புதுப்பானை பொங்கி, கற்கண்டு சர்க்கரையோடு நெய்தேனும் சேர்த்து ஏலக்காய் வாசனைபோல் இதயங்களும் கமழ, பட்டாசு வெடிவெடித்து இனிப்புப்பலகாரங்களும் இனிதே பரிமாறி இனிப்புச்சுவையோடு சொந்தமும்கூட, சந்தோஷத்திற்கும் இந்நாளைப் போல் எந்நாளுமே அமையவேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

இந்தத் தைத்திருநாள் இன்பம் தரும் நாளாக மட்டும் நின்றுவிடாது, அரசியல் சமூக, பொருளாதார ரீதியில் தமிழினம் செழித்தோங்கி எம் ஈழத் திருநாட்டில் பலதரப்பட்ட வளங்களும் நிலைகொள்ள, நிலையான நேசத்தை வளர்த்து, இயற்கை எழில் கொஞ்சும் இலங்கைத்தீவை அனைவரும் நேசிக்க ஒவ்வொரு மனிதனும் தம் இதயக் கதவுகளை இவ் இனிய நாள்தனிலே அகலத்திறவுங்கள்.

கடந்த காலங்களில் நாம் கசப்புடன் பெற்ற அனுபவங்களை மறந்து, இனிப்பான சக்கரைப் பொங்கலுடன் இனிப்பான செயல்களை செய்திருப்போம் என திடசங்கற்பம் கொள்ளுங்கள்.

பாடுபட்டுத் தேடிய பணத்தைப் பதுக்கி வைக்காது பரிதவிப்போருக்காகவும், போரில் அழிவுபட்ட எம் இனிய தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காகவும், போரிலே தமது உறவுகளை இழந்து உணவு, உடை,உறையுள், இன்றித் தவிக்கும் இதயங்களுக்குப் பாசம் காட்டும் பண்பை வளர்க்க - இளைய தலைமுறையினரே எம் தேசம் இனி உங்கள் கைகளில் அல்லவா? ஆகவே இளைய தலைமுறையினரே நீங்கள்தான் இந்தத் தேசத்தைக் கட்டியெழுப்பவேண்டும். அதற்காய் முன் வாருங்கள் இந்நன்நாளில்.

உண்மையான சமாதானத்தை உலகினில் நிறுவ நீதியானது அன்பினால் கட்டுப்பட வேண்டும். ஒவ்வொரு மனிதனும் தத்தம் உரிமைகளைப் பெற்று, அற வழியில் நடக்க வேண்டும்.

நடந்த பாதைகள் முட்களாக இருந்தாலும், இனி நடக்கும் பாதைகளை மலர்களினால் அமைப்பது எமது வருங்கால சந்ததியினருக்கு நாம் செய்யப்போகும் உதவியாக இருக்கட்டும். எனவே எமது வருங்கால சந்ததியைக் கருத்தில்கொண்டு, இறையோடு யாவரும் இணைந்து இசைவுபட்டு, இலட்சிய நோக்கோடு இனிய தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடி இனி வரும் வாழ்வு அனைவருக்கும் இன்பமாக அமையவும், நிரந்தர சமாதானத்தை நாட்டில் நிலைப்படுத்த கைகோர்த்துச் செயற்படுவோம் என்பதோடு, இந்த உழவர் பெருநாளில் அனைத்து மக்களுக்கும் இறையாசியோடு எமது ஆசிகளையும், வாழ்த்துக்களையும் கூறிக்கொள்கிறோம்.

## சுகாதார ஊழியர்கள் நேற்று சுகவீன லீவுப் போராட்டத்தில் குதிப்பு

சுகாதார ஊழியர்கள் சுகவீன லீவுப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

1997 ஆம் ஆண்டிலிருந்து தங்களுடைய சம்பள நிலுவை வழங்கப்படவில்லை என்றே, சுகாதார ஊழியர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்த மூன்று மாதங்களாக நடைபெற்று வருகின்ற இந்தப் போராட்டம் - தமக்குரிய சம்பள உயர்வை வழங்கவேண்டும் என்றுகோரி மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

அமைச்சரவை கூடுகின்றபோது, தம்முடைய பிரச்சினை அமைச்சரவையில் எடுக்கப்பட்டு உரிய தீர்வினைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் என்று கோரித்தான், நேற்று சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர்.

இதனால், நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் சுகாதாரத் திட்டங்கள் முழுமையாகக் கைவிடப்பட்டும், நாட்டின் சுகாதார சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்தும் காணப்படுகின்றன.

வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் உரிய பணிகளைச் செய்யமுடியாமல் இருப்பதுடன், வெளிநோயாளர் பிரிவு மற்றும் உள்ளக அறைகளுக்கான பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

தமது கோரிக்கைகள் தொடர்பாக அமைச்சரவையில் எந்தவித தீர்மானமும் மேற்கொள்ளப்படாதுவிட்டால் அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக தமது நிறைவேற்றுக்குழு ஆலோசிக்கும் என்று சுகாதார ஊழியர்கள் சங்கம் தெரிவித்தது.

(01)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅ∴து ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து. (திருக்குறள்)

## நமது நோக்கு

### பொங்கலும், பொங்குதலும்...

இன்று உழவர் திருநாள். தமிழர் பெருநாள்.

"உழுதுண்டு வாழ்வதற்குகொப்பில்லை கண்டீர்.

பழுதுண்டு வேறோர் பணிக்கு"-என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கின் பெறுமானத்தை உணர்த்தும்நாள், கௌரவிக்கும்நாள். மற்றொரு தை பிறந்துள்ளது.

தமிழில் "தைபிறந்தால் வழிபிறக்கும்" என நம்பிக்கை தரும் பழமொழியொன்றும் உள்ளது.

முடிவுறும் ஆண்டில் துன்ப துயரங்கள், சந்திக்க நேர்ந்த அவலங்கள் தாங்கிக் கொள்ள நேர்ந்த இழப்புக்கள் எல்லாவற்றிற்கும் ஒரு முடிவேற்பட்டு 'தை' பொங்கலுடன் பிறக்கும் இந்த நல்மாதத்தில் இருந்தாவது ஒரு மகிழ்ச்சியான, நிறைவான அமைதியான வாழ்வொன்றிற்கான வழிபிறக்கும்... வழிபிறக்கட்டும்...என்ற நம்பிக்கைமிக்க எதிர்பார்ப்புடன் பழையன கழிந்த ஒரு புதுவாழ்வை ஆரம்பிக்கும் உணர்வுடன் தை பிறக்கும் இந்நாளை, உழைப்போரின் நாளாகவும் ஏற்றுமகிழ்ந்து கொண்டாடும் இனம் தமிழினம்.

கடந்த இரு தசாப்தங்களில் பிறந்த ஒவ்வொரு "தை'யின் இதேபோன்ற மனநிலையுடன் கூடிய எதிர்பார்ப்பு எங்கள் மக்களின் ஆழ்மனதில் இருக்கவே செய்தது.

தை பிறந்து, பிறந்து போய்க்கொண்டே இருந்ததேதொழிய, அவர்கள் எதிர்பார்த்த நிம்மதியான வாழ்வுக்கான, உரிமைகளுடன் கூடிய சுதந்திர இருப்புக்கான வழிபிறக்கவே இல்லை.

சிங்களப்பேரினவாதம் எம்மக்கள் மீது திணித்த கொடிய யுத்தம் அதற்கான சகல வழிகளையும் அடைத்துவிட்டிருந்தது.

போரின் அழுத்தங்களும், அந்நியப்படைகளும், சிறிலங்காப் படைகளும் ஏற்படுத்திய அவலங்களும் பிறந்துபோன - கடந்துபோன ஒவ்வொரு "தை" யையும் வழிதெரியா துயர இருட்டுடனேயே எதிர்கொள்ள வைத்த சோகம் ஒருபெரிய வரலாறாகும்.

முழுமையான விடுதலையுடன் கூடிய சுதந்திர வாழ்வுக்காக, எமது மக்கள் தம்மீது திணிக்கப்பட்ட சிங்களப்பேரினவாதத்தின் போரை தன்மானத்துடனும், இனமானத்துடனும் வெற்றிகரமாக எதிர்கொண்ட வரலாற்றுப் பதிவுகளில் கடந்துபோன ஒவ்வொரு ஆண்டும் தன்னுள் கொண்டிருந்ததால் பிறந்துபோன ஒவ்வொரு தைத்திருநாளும் நம்பிக்கையுடன் வழியொன்றை - வளமான வாழ்விற்காக- தரவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் சந்தித்த நாட்களாகவே போயின.

போர் வெற்றிகள் ஒவ்வொன்றும் அதற்கான பாதையை அதாவது வழியை உருவாக்கிய போதும், இன்னும் அது பூர்த்தியாகவில்லை.

இடையில் புகுந்த சமாதானம் வேறுவழியொன்றைக் காட்டியபோது தற்காலிகமாகவேனும், அந்தப்பாதையில் புறவழி காட்டுவோர் பின்னால் போகவேண்டிய நிலையில், நிர்மாணித்தபாதை அப்படியே இருக்க புதிய சமாதானப்பாதையில் பயணித்து இரு "தை" களைச்சந்தித்து இப்போது மூன்றாவது "தை" யில் காலடிவைக்கிறோம்.

திறக்கப்பட்ட சமாதானப்பாதையில் முட்டுக்கட்டைகள், வேகத்தடைகள் மாத்திரமல்ல, ஆபத்தான புதைகுழிகளும் இருப்பதைப் புரிந்து கொண்டும் தமிழ் மக்கள் புறவழிகாட்டிகள் மீதான நம்பிக்கையுடனும், அதையும் விட தமது சொந்தத் தலைமை மீதான பற்றுறுதியுடனும் கடந்த இரு ஆண்டுகளிலும் வைத்தகாலடிகள் சொற்பமே.

தமிழ் மக்களுக்கான சமாதானப்பாதையில் இருபுறமும் மிதிவெடிகள், கவனம் என்ற அறிவிப்புப் பலகைகள் இடையிடை முட்கம்பி சுருள்களிலான நெடும்வேலிகள், துப்பாக்கியை குறிவைத்து நீட்டியபடி சுடத்தயாராக நிற்கும் காவலரண் சிப்பாய்கள் உத்தரவின்றி உள்நுழைந்தால் சிறுதண்டனை வழங்கப்படும் என்ற வார்த்தைகளுடனான அறிவிப்புப்பலகைகள் , உறுமியபடி அங்குமிங்கும் விரையும் இராணுவ வாகனங்கள், இராணுவ முகாம்கள் என...எதுவுமே நம்பிக்கை தருவதாக இல்லை.

இவையாவும் தமிழ்மக்களுக்கு மட்டுமல்ல சமாதானத்துக்கே அவமதிப்பூட்டும் விடயங்களல்லவா?

இன்னமும் சொந்தமண்ணில் சென்று குடியேறும் உரிமை கிடைக்கவில்லை. சுயமாகத் தொழில் புரிய கடலிலும், தரையிலுமான தடைமுற்றாக விலகவில்லை...இராணுவ ஆக்கிரமிப்பு நிலை விலகவில்லை...

ஆனாலும், சமாதானம் பற்றிய வெற்றுப்பேச்சுக்கள் தொடரவே செய்கின்றன. இந்தச்சூழலில்தான் கடந்த இரண்டு "தை"களும் வந்துபோன நிலையில் இதோ மூன்றாவது தையும் பிறந்துள்ளது.

உலையில் அரிசி பொங்கும்போது மனதும் பொங்கவே செய்கிறது. ஏமாற்றத்தால், சினத்தால், அவமானத்தால். ..ஆத்திரத்தால்...என மனம் பொங்கும் நிலையில் தமிழ் மக்கள் பொங்கலை விழாவாகக் கொண்டாடுதல் சாத்தியமா என்ற கேள்வியும் எழவே செய்கிறது.

இத்தகைய கொந்தளிப்பு நிலையிலும் அவர்கள் தம் நம்பிக்கையை தளரவிடவில்லை.அதனால் பொங்குகிறர்கள்.

அத்துடன் இது தமிழனுக்கான, உழைப்பாளிகளுக்கான நாளல்லவா. அடைபட்ட, தடைபட்ட வழிகள் தமிழனுக்கு புதிதல்லவே.

தடைதகர்த்து முன்னேறுதல் அவனின் மரபியல் குணாம்சம்.

எனவே இந்தத் 'தை'யையும் நம்பிக்கையுடன் தான் வரவேற்கிறோம். இந்த நிலையில் பாரதிதாசனின் கவிதை வரிகள் நினைவுக்கு வரவே செய்கின்றன. அந்த வரிகள்-

பொங்கு தமிழர்க்கு இன்னல் விழைந்தால்
சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு - என்பவையேயாகும்.

## நாடும் நடப்பும்




# 6 தமிழ் மாவட்ட ஆசிரியர்களுக்கு வவுனியா நகரில் மேற்படிப்பு

ஆறு தமிழ் மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான கல்வியியல் முதுமாணிக் கற்கைகள், பட்டப்பின் படிப்புத் துறைகளுக்கான பயிற்சி வகுப்புக்கள் - யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த சனிக்கிழமை இவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தின் ஏற்பாட்டிலேயே இந்த வகுப்புக்கள் ஆரம பித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பயிற்சிநெறிக்கென - வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, கல்முனை முதலான ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த 125 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான பயிற்சிநெறியின் தொடக்கவிழா - கடந்த சனிக்கிழமை வவுனியா மாநகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ.மோகனதாஸ், உயர் பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் க.சிற்றம்பலம், வவுனியா கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி ஆர்.பேணாட், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைச்செயலாளர் த.பஞ்சலிங்கம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜகுகனேஸ்வரன் முதலானோர் கலந்துகொண்டு சிறப்புரைகளை ஆற்றியுள்ளார்கள்.

இதேவேளை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான இந்தப் பயிற்சியானது, ஏற்கனவே யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ப)

## கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் பயிற்சிநெறிகள் பெப்ரவரி 2 இல் ஆரம்பம்

(கொக்குவில்)

யாழ். கடற்தொழில் கடலோட்டு இயந்திரவியல் கல்லூரியில் 2004 ஆம் ஆண்டுக்கான முதல் மூன்று மாத பயிற்சி நெறிகள் - பெப்ரவரி 2 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகுமெனக் கல்லூரி அதிபர் இ.செபஸ்தியாம்பிள்ளை தெரிவித்தார்.

பயிற்சிநெறியில் பங்குகொள்பவர்களுக்கான நேர்முகப் பரீட்சை - இந்த மாதம் 19 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பயிற்சிநெறியில் கலந்துகொள்ள விண்ணப்பித்தவர்களுக்கான அழைபபுகள், தனித்தனியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், தெரிவானவர்களுக்குப் பயிற்சிக்காலங்களில், நாளொன்றுக்குப் 100 ரூபா ஊக்குவிப்புத் தொகையாக வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (206)

## கடலில் தத்தளித்த மீனவர்களை இந்திய மீனவர்கள் மீட்டுள்ளனர்

படகு என்ஜினில் ஏற்பட்ட கோளாறு காரணமாக, இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்து பரிதவித்த இலங்கை மீனவர்களை - கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் மீட்டு வேதக் கோவிலில் அடைக்கலம் கொடுத்துள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டம் தூத்தூர் என்ற இடத்திற்கு அருகே நடுக்கடலில் படகு ஒன்று 4 மீனவர்களுடன் தத்தளிப்பதைப் பார்த்த தூத்தூர் பகுதி மீனவர்கள், உடனடியாக அங்கு விரைந்துசென்று படகையும், அதில் இருந்த 4 மீனவர்களையும் மீட்டனர்.

பின்னர் அவர்களை தூத்தூர் வேதக்கோவிலுக்கு கொண்டு சென்று, பாதிரியார் செங்கோலிடம் ஒப்படைத்தனர். காப்பாற்றப்பட்ட மீனவர்கள் ஜோசப், ஜூடித், லாசரஸ், சுதீஷ்சமோர், சாலிகாயாடி ஆகியோர் எனவும், இவர்கள் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிய வந்துள்ளது.

# வேலைநிறுத்தப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது

சுங்கத்திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டுவந்த வேலை நிறுத்தப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

சுங்கத்திணைக்களத்திற்கு கொழும்பு கோட்டைப் பகுதியிலிருந்த 4 ஏக்கர் நிலப்பகுதியை, கொழும்பு மாநகர சபைக்கு நிதியமைச்சு கொடுக்க இருந்த நடவடிக்கையை எதிர்த்தே, சுங்கத்திணைக்கள அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் நிதியமைச்சர் சொக்ஸிக்கும், சுங்க அதிகாரிகளுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளினை அடுத்தே இந்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

நிதியமைச்சு சுங்கத்திணைக்களத்திற்கு வேறு ஒரு இடத்தில் மாற்றுக்காணி வழங்கி ஒழுங்குசெய்வதாகவும், மாநகர சபைக்கு கொடுக்கப்பட்ட காணி அவர்களுக்கே உரியதென்று, நிதி அமைச்சர் கூறியதன் அடிப்படையில் இந்த போராட்டத்தை சுங்க அதிகாரிகள் நிறுத்தியுள்ளனர்.

ஏற்றுமதி இறக்குமதி துறையில் வருமான நட்டம் ஏற்பட்டிருக்கின்றதாகவும், அத்தியாவசியப் பொருட்கள், நுகர்வுப் பொருட்களுக்கான நட்டமும் சுங்கத்திணைக்களத்தினர் மேற்கொண்ட போராட்டத்தால் இடம்பெற்றதாகவும் ஏற்றுமதி இறக்குமதி துறையினர் அறிவித்துள்ளனர். (01)

# பணமோசடியில் ஈடுபட்ட நபருக்கு ஒரு வருட சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகக்கூறி, பணமோசடியில் ஈடுபட்ட ஒருவருக்கு - ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மல்லாகம் குருமன்காட்டுப் பகுதியைச் சேர்ந்த நாதன் ஜெயராஜா என்பவர் அதேயிடத்தைச் சேர்ந்த ஒருவரிடம் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக்கூறி, விண்ணப்பபடிவங்களுக்கென நானூறு ரூபா யைப் பெற்றுள்ளார்.

ஆனால், பின்னர் வேலைவாய்ப்புக்கு விண்ணப்பிப்பதற்கான படிவத்தையோ அல்லது வேலைவாய்ப்பையோ இவர் பெற்றுக்கொடுக்கவில்லை. இது தொடர்பாக பலதடவைகள் கேட்டபோது, சாட்டுப்போக்குச் சொல்லி வந்துள்ளார்.

பணத்தைக் கொடுத்தவர் பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து, இது தொடர்பான விசாரணைகளை யாழ். நீதிவான் நீதிமன்றம் மேற்கொண்டு வந்தது.

இந்த விசாரணைகள் மீதான தீர்ப்பாகவே இரு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட சிறைத்தண்டனை இவருக்கு விதிக்கப்பட்டுள்ளது. (ச)

## ஆய்வுக் கட்டுரை

# யாழ்பாணக்குடாநாடு பாலைவனமாகுமா? சோலைவனமாகுமா?



குடாநாட்டில் மண் வளம் நாளுக்குநாள் குறைந்துசெல்கின்றது. நீரில் உப்புத் தன்மை வருடாவருடம் அதிகரித்து வருகின்றது. காற்றில் நாம் சுவாசிக்கவேண்டிய ஒட்சிசனளவு குறைந்து காபனீரொட்சைட்டின் அளவு அதிகரித்து வருகிறது. இந்த நிலைமை தொடருமாயின் - ஒரு கட்டத்தில் முற்றாக நாம் குடிப்பதற்கு நீரின்றி, பயிர் செய்யவும் வாழவும் நிலமின்றி ஓர் இடத்தில் வாழமுடியாதநிலை தோன்றும் போது, அந்த இடம் பாலைவனமாக மாறுகின்றது.

நமது இடத்தை விட்டு இடம்பெயர்ந்து சுழல் அகதிகளாக வாழவேண்டிய நிலை ஏற்படும். சில சமயங்களில் இடம்பெயர்வுக்கு இடம் இல்லையாயின் பட்டினிச் சாவுகளை எதிர்நோக்கவேண்டியேற்படும்.

யாழ்ப்பாண குடாநாடு பாலைவனமாக மாறக் காரணம் - பல்வேறு வகையான முறைகளில் சுற்றாடல் கவனிக்கப்படாமல், சூழல் மாசடைந்தமையாகும். சனத்தொகை அதிகரிக்க அதற்கேற்ற உணவு வழங்குவதற்கும் வருவாயை அதிகரிப்பதற்கும் குடாநாட்டில் விவசாயத்துறையில் தொழிநுட்பத்தின் பெரு வெற்றியும், பொருளாதார அபிவிருத்தியும் அதனால் ஏற்பட்ட நன்மையும் சேர்ந்து எம்மையும் இங்குள்ள சூழலையும் பிரித்துவிட்டது. இதனால் சூழலை மறக்கிறோம், சுற்றாடல் மாசடைவதைக் கவனிக்காது விடுகிறோம். சூழல் பாதுகாப்புப் பற்றி அவதானிக்காது விட்டோம். இன்று சூழலே எம்மைச் சிந்திக்கவைத்துள்ளது. இயற்கை எப்போதும் சமநிலையைப் பேணமுயலும். சமநிலையைப் பேணமுடியாத விடத்து எமக்குப் பாடம்புகட்டிவிடும்.

மூன்பு பருகிய நீரின்சுவை இன்று பருகும் நீரில் இல்லை. இன்று வன்னீரையே நன்னீர் என்ற பெயரில் பருகுகிறோம். அன்று பருகிய கிணற்றுத் தண்ணீர் இன்று வன்னீர் போல் இருக்கிறது. நல்லகாற்றைச் சுவாசிக்க முடியவில்லை. தூசி மூக்கை அடைக்கிறது. வேலை செய்யாமல் மேல்மூச்சுக் கீழ் மூச்சு வாங்குகிறது. வரவர கோடை காலத்தில் வெய்யிலைத் தாங்கமுடியவில்லை. உணவுகள் சுவையில்லாமல், நீர்த் தன்மையாக இருக்கின்றன. உண்ணும் உணவுகளில் நஞ்சு கலந்துள்ளதா என்ற பயப்பீதியில் உண்ண வேண்டியுள்ளது. வீதியில் சென்றால், வாகனங்களின் புகைமண்டலம். இவையெல்லாம் என்ன...?

விஞ்ஞானத்தாலும் பொருளாதார அபிவிருத்தியாலும் நாம் அடைந்த பயன்கள்தான் இவை. நாம் வாழும் பிரதேசத்தில் எல்லோருமே மாசடைந்த சூழ்நிலையில் வாழ்கின்றோம். இவற்றில் யாழப்பாணக் குடாநாட்டில் கடந்த 60 வருடங்களின் பின்குறிப்பாக 30 ஆண்டு காலத்தில் ஏற்பட்ட மாற்றமாகும்.

சனப்பெருக்கத்தின் காரணமாக விவசாய அபிவிருத்தி மட்டுமன்றி, கட்டுமானப் பணிகளும் நகர அபிவிருத்திகளும் எப்பொழுது குடாநாட்டில் ஆரம்பமானதோ, அன்றே எமது குடாநாடும் மாசடையத் தொடங்கிவிட்டது. சனத்தொகை வளர்ச்சி வேகத்திற்கு ஏற்ப விறகு தேவைக்கும் தளபாட தேவைக்கும் மரங்கள் வகைதொகையின்றி வெட்டப்பட்டன. அதுவும் குறிப்பாக வன்னி மாவட்ட பிரதேசத்தில் இருந்து மக்கள் இங்குவருவது தடைப்பட்டபின் வெட்டப்பட்ட மரங்களுக்கு அளவே இல்லை. இத்துடன் யுத்தத்தினால் ஏற்பட்ட சீரழிவுகளும் எமது சூழலில் பாரிய மாசடைவை ஏற்படுத்தியுள்ளது. இவற்றினால் சூழலின் வெப்பம் அதிகரித்தது. மழை நீர் கடலுக்கு ஓடியது. வளமான மண் காற்றினாலும் மழை நீரானும் அரித்துச் செல்லப்படுகிறது. நீரோடைகளும் நீர்ப்படுக்கைகளும் விரைவில் வற்றி சூழலில் மாற்றங்களை ஏற்படுத்தின மாறுவதை ஊக்குவிக்கிக்கின்றன

- ☆ மண், நீர் காற்று என்பவற்றில் போதிய முகாமை இல்லாமை.
- ☆ வாழ்க்கை ஆதாரங்களை அழித்து எடுத்தமை.
- ☆ பாரம்பரிய பண்பாடுகளையும் கலாச்சாரங்களையும் சிதைவடையச் செய்தமை.
- ☆ இயற்கை வளங்களை சுய நல நோக்கில் சுரண்டியமை.
- ☆ பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கங்களை மாற்றியமை.

(தொடரும்)

மு.கந்தசாமி (மேலாளர்)
அக்றோடெக் தகவல் மையம், கரவெட்டி.

## பத்திரிகையாளர் எஸ்.எம்.ஜி.இன் அரைநூற்றாண்டு அனுபவ வெளிப்பாடு



இலங்கையின் முதுபெரும் தமிழ்ப் பத்திரிகையாளரான எஸ்.எம்.கோபாலரத்தினம் எழுதிய 'பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு' என்னும் நூல் பொங்கல் தினமான இன்று வெளியிடப்படுகிறது.

1953 ஆம் ஆண்டில் கொழும்பில் வீரகேசரியில் தமது பத்திரிகை வாழ்வைத் தொடங்கிய எஸ்.எம்.ஜி., கோபு, என்றும் அழைக்கப்படும் திரு.கோபாலரத்தினம், 1960 ஆம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையின் செய்தியாசிரியராகவும் ஆசிரியராகவும் இருபத்தியொரு ஆண்டுகள் பணியாற்றினார். 1960 ஆம் ஆண்டில் வாரமிருமுறை வெளிவந்துகொண்டிருந்த 'ஈழநாடு', கோபுவின் வருகையைத் தொடர்ந்து 1961 ஆம் ஆண்டில் தினப்பத்திரிகையாக வெளிவரத்தொடங்கியது.

வாரமிருமுறையாக வெளிவந்த போதும் பின்னர் தினப் பத்திரிகையானபோதும், பிந்திய பதிப்பு, விசேஷ பதிப்புக்கள் என நாட்டு நிலைமைக்கும், சம்பவங்களுக்கும் ஏற்ப வாசகர்களுக்கு ஈழநாடு - செய்திகளையும் தகவல்களையும் உடனுக்குடன் கொடுத்து யாழ்ப்பாணத்தில் புதிய சாதனைகளை ஏற்படுத்தியது.

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்பாக தந்தை செல்வநாயகம் தலைமையில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி 1961 ஆம் ஆண்டில் ஆரம்பித்த சத்தியாக்கிரகப் போராட்டம் பின்னர் வடக்கிலும், கிழக்கிலும் அரசாங்க அலுவலகங்களுக்கு முன் விரிந்து பரவி அரசயந்திரம் செயலற்றுப்போகச் செய்தது. இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டம் மிக அமைதியாக சாத்வீகமாக நடைபெறுவதற்கு ஈழநாடு பெரும் பங்காற்றியது. இதில் கோபுவின் பங்கு அளப்பெரியது. யாழ்ப்பாணத்திலிருந்து இன்று நான்கு தினசரிப் பத்திரிகைகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. இதற்கு கோபுவே வழிகாட்டியாக இருந்திருக்கிறார்.

நாட்டில் அமைதியும் இன ஒற்றுமையும் நிலவிய காலத்தில் பத்திரிகையில் பணியாற்றத் தொடங்கிய எஸ்.எம்.ஜீ - அரசியல் போட்டிகள், சாத்வீகப் பேராட்டங்கள், கட்சிப் போராட்டங்கள் ஆகியவற்றைச் சந்தித்தார். ஆயுதப் பேராட்டங்களிலும் இராணுவ நெருக்கடிகளிலும் பலசோதனைகளை எதிர்கொண்டார். இந்திய இராணுவத்தின் சிறையிலும் இருந்தார்.

'ஈழநாடு', காலைக்கதிர், செய்திக்கதிர் (வாரப்பத்திரிகைகள்), ஈழமுரசு, ஈழநாதம் ஆகிய பத்திரிகைகளும் கோபுவின் கைவண்ணத்தில் வளர்ந்தவை. கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் முதல்தினசரியாக இரண்டாயிரமாவது ஆண்டில் வெளிவந்த 'தினக்கதிர்' தினசரிப் பத்திரிகையும் கோபுவின் சாதனைக்கு மற்றொருசான்று.

ஆணித்தரமான ஆசிரிய தலையங்கங்கள், ஆக்கபூர்வமான அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளைக் கொண்ட கட்டுரைகளை ஆயிரக்கணக்கில் எழுதிக்குவித்திருக்கிறார். இன்றும் கட்டுரைகளும் பத்தி எழுத்தும் தொடர்ந்து எழுதிவரும் எஸ்.எம்.ஜி. கலைஞர்கள் பலரின் வளர்ச்சிக்கும் ஊக்கமளித்தார்.

பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் பலரை உருவாக்கியிருக்கும் கோபு - 1987 ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கில் அமைதியை நிலைநாட்டவந்த இந்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்டு, இரண்டு மாதங்கள் சிறைவைக்கப்பட்டார். இந்தச் சிறை அனுபவத்தை 'ஈழமண்ணில் ஓர் இந்தியச்சிறை' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டிருக்கிறார். இதற்கு முன் இந்தக் கட்டுரைகள் தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் 'ஜுனியர் விகடன்' சஞ்சிகையில் ஆறுமாதங்கள் தொடராக வெளிவந்தன.

பத்திரிகையையே தமது வாழ்வாக்கிக் கொண்ட திரு.எஸ்.எம்.ஜி. கோபாலரத்தினம் பத்திரிகைவாழ்வில் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக புரிந்த சாதனைகள் சந்தித்த சோதனைகள், வேதனைகள் பற்றிய தமது அனுபவத்தை, 'பத்திரிகைப்பணியில் அரை நூற்றாண்டு' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டிருக்கிறார். இந்நூல் தைப்பொங்கல் தினமான இம்மாதம் பதினைந்தாம் திகதி வெளியிடப்பெறுகிறது.

யாழ்ப்பாணம் நாவலர் வீதியிலமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் உயர்திரு சிவமகாராஜா தலைமையில் தைப்பொங்கலன்று பிற்பகல் நான்கு மணிக்கு இந்த நூல் வெளியிடப்பெறுகிறது.

## செய்திக் கட்டுரை - கி.கமலதாஸ்

# யுத்தம் நிறுத்தப்பட்ட போதிலும் அடக்கப்படும் மீனவ சமுதாயம்



போர்க்காலச் சூழலில்தான் - தமிழ் சமூகம் அடக்கப்பட்டு ஆக்கிரமிப்புக் கொடுமைகளுக்கு உள்ளாகி துன்பங்களையும் துயரங்களையும் அடைந்துள்ளதென்றால், இந்த யுத்தம் நிறுத்தப்பட்டு, சமாதான சூழல் நிலவிக்கொண்டிருக்கின்ற இன்றைய காலப் பகுதியிலும் துன்பங்களையும் துயரங்களையும் தொடர்கதையாக அனுபவித்துவருவது வேதனைக்குரிய விடயமாகும்.

அந்த வகையில் இந்த யுத்தம் நிறுத்தப்பட்டதன் பிற்பாடு எங்களுக்கு என்ன நடந்தது? எங்கள் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டதா? என்ற கேள்விகளை தொடுத்துப் பார்த்தால், தரைமார்க்கம் மூலம் கொழும்புக்கு (ஏ 9) போகலாம் என்ற பதிலை எதிர்பார்க்கமுடிவதோடு மட்டுமல்லாது, அழகிய சவர்க்காரங்களும், ஆடம்பரப் பவுடர்களும், ஷம்பூக்களும், பிளாஸ்ரிக் கதிரைகளுமே எங்களுக்குக் குறைவுபடாது கிடைத்துக்கொண்டிருக்கிறது என்று கூறினால், அதை எவராலும் மறுத்துரைக்கமுடியாது.

துன்பங்களையும் துயரங்களையும் தலைக்கு மேலே சுமந்துகொண்டு வாழ்க்கை நடத்திவரும் நமது சமூகத்திற்கு தற்போதைக்கு உல்லாசமாகக் கொழும்புக்குப் போவதையும், ஆடம்பரமாகச் சுற்றித்திரிவதையும் அவர்கள் விரும்புவதாக இல்லை. அதனை விடுத்து மீளக் குடியமர்தல், தொழில் அடக்குமுறைகளை நீக்கிச் சுதந்திரமாகத் தொழில்புரிதல்....போன்ற இன்னும் எத்தனையோ பிரச்சினைகளை இந்த மீனவ சமுதாயம் எதிர்நோக்கிவருவது யாவரும் அறிந்த விடயம். முன்னொரு காலத்தில், சுழல் காற்றுக்கும் கடற்சுழிக்கும், கொட்டும் மழைக்கும், பொங்கும் அலைக்கும் தங்களது உயிர்களைப் பணயம் வைத்துவிட்டு துணிவுடன் தொழில் புரிந்துகொண்டுவந்த இந்த மீனவ சமுதாயம் யுத்த காலப் பகுதியிலேயோ அல்லது யுத்தம் நிறுத்தப்பட்ட இன்றைய காலப் பகுதியிலேயோ - கடற் படைகளின் ஆக்கிரமிப்புக்களுக்கும், அடக்கல்களுக்கும் தமது உயிரைப் பயணம் வைத்துவிட்டு சுதந்திரமின்றித் தொழில் புரிந்து அன்றாட ஜீவனோபாயத்தைக்கூட பூரணமாகப் போக்கிக்கொள்ள முடியாது வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த மீனவ சமுதாயத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முதன்மை பெறுவது மீளக்குடியமர்வு ஆகும். தமிழ் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுவிட்டார்கள் என்று சர்வதேசத்திற்கு பிரசாரம்செய்து, அதன்மூலம் உதவிகளையும் சலுகைகளையும் பெற்றுக்கொண்டிருக்கும் இன்றைய அரசாங்கம் உண்மையில் தமிழ் மக்களை மீளக்குடியமர்த்திவிட்டார்களா? இல்லை.

குறிப்பாக கடற்கரையோரத்தை அண்டிய பிரதேசங்களான தெல்லிப்பளை, மயிலிட்டி, தனங்கிளப்பு, நாகர்கோவில் என்று நீண்டு செல்லும் பல பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்காதது மட்டுமல்லாது உயர் பாதுகாப்பு வலயம் என்ற கொச்சை வார்த்தைகளைக் காட்டிக்கொண்டு மக்களை மீளக்குடியமர அனுமதிக்ாது அவர்களை துன்பங்களையும் துயரங்களையும் சுமக்கவிடுவது எந்தவகைக்கு நியாயம்.

அடுத்து இந்த மீனவ சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினையாக தொழில் அடக்குமுறைகள் காணப்படுகின்றது. கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு - பாஸ் முறை, குறிப்பிட்ட கடல் எல்லைக்குள் மட்டும் மீன்பிடிக்க அனுமதி (அதாவது கண்ணுக்கு எட்டிய தூரம் வரை), இரவு நேரங்களில் மீன்பிடிக்க அனுமதி மறுப்பு, பாயைத் தெளிவாக வள்ளங்களில் தொங்கவிடுதல், சிறிய வள்ளங்கள், கட்டுமரங்கள் மூலமே தொழிலில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தம் போன்ற பல்வேறு அடக்குமுறைகளை இந்தக் கடற்தொழில் மீனவ சமூகத்தினர்மீது கடற்படையினர் திணித்துக்கொண்டிருப்பது, அவர்களின் வாயில் மண்ணை அள்ளிப் போடுவது போன்ற செயலாகும்.

அட்க்குமுறைகள் ஒருபுறம் இருக்க, சிங்களக் கடற்படையினர் அப்பாவி தொழிலாளர்கள் மீது - அடித்தல், வெருட்டுதல் போன்ற கொடூர நடவடிக்கைகளை மேற்கொள்வதன் காரணமாக அவர்கள் உளவியல் ரீதியான பாதிப்புக்களைச் ஏற்படுத்தி வருகின்றனர்.

அத்தோடு இந்த மீனவர்களின் வள்ளங்கள், கட்டுமரங்கள், வலைகள் போன்ற மீன்பிடி உபகரணங்களைக்கூட நாசம் செய்யும் முயற்சிகளிலும் கடற்படை ஈடுபட்டு வருவது கொடுமையான செயலாகும்.

இப்படிப்பட்ட இந்தத் தொழில் அடக்குமுறைகளையும், சுரண்டல்களையும் தாங்கிக்கொண்டுவரும் இந்த மீனவ சமுதாயம் பலதரப்பட்ட வர்க்கத்தினரிடமும் நீதிகேட்டு மகஜர்கள் அனுப்பியும் மறியற்போராட்டங்களை நடத்தியும் தங்களது பிரச்சினைகளை அனைத்துத் தரப்பினருக்கும் வெளிப்படுத்திய போதிலும் அது பற்றிய தீர்வுகள், மந்தமாகவும் இழுத்தடிக்கப்பட்டுக்கொண்டும் வருவது அவர்களை வீதிக்குத்தள்ளி விடுகிறது.

அடக்குமுறைகளும் ஆக்கிரமிப்புக்களும் தங்களது வாழ்க்கைச் செலவை பூர்த்திசெய்வதே கடினமான இன்றைய காலப்பகுதியில், இந்திய மீனவர்களின் அத்துமீறல்களும் அடாவடித்தனங்களும் நாளுக்குநாள் அதிகரித்து வருவதோடு நின்றுவிடாது. அவர்களின் உள்நுழைவுகள் பாரிய பிரச்சினைகளையும் ஏற்படுத்தத் தொடங்கிவிட்டது.

இந்திய மீனவர்கள் இலங்கைக்குச் சொந்தமான நீர்கொழும்பு, மன்னார், முல்லைத்தீவு போன்ற பல கடற்பிரதேசங்களில் அத்துமீறி இலங்கை மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களைச் சேதம்செய்வது மட்டுமல்லாது, அவர்களின் கடல் வளங்களைச் சுரண்டுவதற்கும் நாசம் செய்வதற்கும் எத்தனிக்கமுயல்வது எதற்காக? என்ற கேள்விகளைக் கேட்டுப்பார்த்தால், 'நாங்கள் ஏழை மீனவர்கள். எங்கள் இந்தியக் கடலில் வளம் குன்றிவிட்டது. திசை மாறிவந்தோம்' என்ற ஏமாற்றுச் சாட்டுப்போக்குகளை சொல்லிவருவது வியப்பாகவேயுள்ளது.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம், பொருளாதார ஒப்பந்தம் போன்ற பலதரப்பட்ட ஒப்பந்தங்களையும் செய்துகொள்ளும் நம் நாடு, இந்த இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டும், காணாதுபோல் செயற்படுவதோடு நில்லாது, கடற்படையினரால் அல்லது மீனவர்களால் பிடிக்கப்பட்ட இந்திய மீனவர்களை - சிறையில் அடைத்து நீதிமன்றுக்கு அனுமதித்து வெளியில் விட்டுவிடுவதுமே நடந்துகொண்டிருக்கின்றது. இது குறித்து நமக்கு என்ன நீதி கிடைத்தது. அவர்களின் சுரண்டல்களும் அத்துமீறல்களும் அடக்கப்படுவதாகத் தெரியவில்லை.

இறுதியாக இந்த மீனவர்களின் வாயிலும், வயிற்றிலும் தொடர்ச்சியாக மண்ணை அள்ளிப்போடாது அவர்களின் வாயிலும் வயிற்றிலும் சோற்றைப் போடுவதற்கு யார்தான் கைகொடுப்பார்களோ தெரியவில்லை. இவ்வாறாகத் தொடர்ச்சியாக துன்பங்களையும் துயரங்களையும் அனுபவித்துவரும் இந்தச் சமூகத்திற்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது மனிதநேயமுள்ள ஒவ்வொரு மனிதனதும் கடமை மட்டுமல்ல கட்டாயமும் ஆகும். ☆

## இஸ்ரேல் காஸாப் பகுதியில்
# தற்கொலைத் தாக்குதல் ஒன்றில் நால்வர் பலி! 10 பேர் காயம்!!



இஸ்ரேல் காஸாப் பிரதேசத்தின் எல்லைப்பகுதியில் தற்கொலைக் குண்டுத்தாக்குதலை பலஸ்தீன போராளிகள் நிகழ்த்தியவேளையில் நால்வர் கொல்லப்பட்டும் மேலும் 10 பேர்வரை காயமடைந்துமுள்ளனர். கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள் அனைவரும் இஸ்ரேலியர்கள் என இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

மேற்குறிப்பிட்ட தாக்குதலை நடத்தியவர் ஒரு பெண் போராளி எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டிடத்தொகுதி ஒன்றிற்குள் நுழைவதற்குமுன் பலஸ்தீனர்கள்மீது பாதுகாப்பு சோதனைகள் மேற்கொண்டிருந்தவேளையில் குண்டுதாரி தன்னை வெடிக்கவைத்துக் கொண்டதாகவும், அருகில் நின்ற அராபியர்களும், யூதர்களும் அவலக்குரல் எழுப்பியதாகவும், ராய்ட்டர் செய்திஸ்தாபனம் தெரிவித்தது.

கடந்த 3 ஆண்டுகளாக மிகவும் பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ள இந்தப்பிரதேசத்தில் தாக்குதல்கள் அதிகரித்துவருவதாகச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை

இஸ்ரேலின் மேற்குக்கரைப் பிரதேசத்தில் அமைந்த யூதர்களின் குடியிருப்பு பிரதேசமான ரஸ்மோவில் பலஸ்தீனிய துப்பாக்கிதாரியொருவரின் சூட்டில் இஸ்ரேலியர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றுமொரு இஸ்ரேலியர் காயமடைந்துள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவித்துள்ளன. மேலும் பலஸ்தீனர் ஒருவர் ராபா அகதிமுகாமில் இஸ்ரேலியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக இஸ்ரேலியப் படையினர் தெரிவித்துள்ளனர்.

# ஈராக்கில் கார்க்குண்டுத் தாக்குதல் இருவர் பலி! 34 பேர் படுகாயம்!!
## காயமடைந்தவர்களில் 14 பேர் பொலிஸ் அதிகாரிகள்



(பக்தாத்)

ஈராக்கில் பாகுவா நகில அமைந்துள்ள பொலிஸ நிலையத்திற்கு முன்பாக நடைபெற்ற கார்க் குண்டுவெடிப்பில் இருவர் கொல்லப்பட்டும், 30 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாகவும் சம்பவத்தை நேரில் அவதானித்த பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தின் போது கார்க்குண்டுதாரி வேகமாக வண்டியை பொலிஸ் நிலையத்தை நோக்கிச் செலுத்திவந்ததாகவும், வண்டி பொலிஸ் நிலையத்தை அண்மித்ததும் அதனை வெடிக்க வைத்ததாகவும் மேலும் தெரிவித்தார்.

மேலும் வெடித்துச் சிதறிய வண்டிச சாரதியின் உடற்பாகங்கள் சிதறிக்கிடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவத்தின் போது காயமடைந்தவர்களில் 14 பொலிஸ் அதிகாரிகளும் அடங்கியிருந்ததாகவும் -

புதிய ஈராக்கிய பொலிஸ் சேவையை நிலைகுலையச செய்வதற்காகவே பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல்கள் தொடுக்கப்படுவதாகவும் பி.பி.ஸியின் அலஸ் ரெயர் தெரிவித்தார்.

## சுவீடன் வெளிநாட்டமைச்சர் கொலை:
## கொலையாளி குற்றத்தை ஒப்புக்கொண்டார்



சுவீடனின் வெளிநாட்டமைச்சர் ஆனா லின்டர் - விற்பனை அங்காடி ஒன்றில் பொருட்களை வாங்கச் சென்ற நேரத்தில் 25 வயதுடைய, உளநிலை பாதிக்கப்பட்ட ஒருவரினால் கத்திக்குத்துக்கு உட்பட்டு 4 மாதங்களுக்கு முன் மரணமடைந்திருந்தார்.

இந்தச் சம்பவத்தில் கைது செய்யப்பட்டிருந்த மிஜெலோ மிஜெய்லோவிக் தீவிரமாக விசாரிக்கப்படு வந்தார். மேலும் விசாரணையின் போது வெளிநாட்டமச்சரை தானே குத்திக்கொன்றதாகவும் ஒப்புக் கொண்டிருந்தார்.

மிஜெய்லொவிக்கிற்காக வாதிட்ட அவரது சட்டத்தரணி பீட்டர் அஸ்தின் இது திட்டமிட்டு நடத்தப்பட்ட கொலை அல்ல என நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இதனிடையே இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த மிஜெய்லொவிக் அந்தக்கொலையை தான் செய்யவில்லை என முன்னர் மறுத்துவந்திருந்தார். ஆனால், கொலைக்குப் பாவித்த கத்தி பிரித்தானியாவில் மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

மேலும், கொலையாளி கடந்த காலத்தில் உளநிலைப் பாதிப்புக்குளளாகியிருந்ததற்கான சான்றுகளை அவரது சட்டத்தரணி நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தனர்.

கொலையாளிக்கு அரசியல் பின்னணி எதுவும் கிடையாதெனவும் அவர் தெரிவித்திருந்தார்.

குற்றம் நிரூபிக்கப்பட்டால் 15 வருடம சிறைத்தண்டனையை அவர் அனுபவிக்கநேரிடலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.


மக்களின் உயர் ரசனை நிமித்தம் பரம்பரைகளாக கொண்டு செல்லப்படும் நாட்டியம் நாட்டின் பாரம்பரியத்தை எடுத்தியம்புகிறது. அதுவும் எமது செல்வமே.




அதைபோலவே
மஹஜன சம்பத நாட்டுக்கும் உங்களுக்கும்
சௌபாக்கியத்தை ஏற்படுத்த வல்ல எமக்கே
உரித்தான செல்வமாகும்

மஹஜன சம்பத - எமது செல்வம்

மஹஜன சம்பத
MAHAJANA SAMPATHA

தேசிய லொத்தர் சபை
234/2, காலி ரோட், கொழும்பு - 03.

RJA

ராஜா யாழ்ப்பாணம்.
அனைத்து ரசிகர்களுக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த
ஜெய்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-2005)

திறைஞ்சனாலி சங்கானை
ரசிகர்களுக்கு பொங்கல் நல்வாழ்த்துக்கள்
இன்றுமுதல்
சரண், மீரா வாசுதேவன் நடித்த
உன்னைச் சரணடைந்தேன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
TOMP RAIDER II
(சி-2004)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

### நாற்சந்தி

"என்ன மணியம்விடியக் காலமையே சந்திக்கு வந்திட்டாய் வீட்டிலை பொங்கல் இல்லையே...."

"பொங்கேல்லை......அதுதான் வீடு உயர் பாதுகாப்பு வலயத்துக்குள்ளேயல்லே......அங்கை ஆமிக்காரன்தான பொங்க முடியும்.......நான் கோயில்லை தான் பொங்கினனான்"

"அதுசரி முதல்லை என்ரை பொங்கல் வாழ்த்தைச் சொல்லுறன்"

"அதுசரி உனக்கும் என்ரை வாழ்த்துக்கள்....மணியம் இரவு முழுக்க ஒரே நித்திரை முழிப்பு....கண் எல்லாம் எரியுது...."

"நேற்றைக்கு சிவராத்திரி முழிப்பு இல்லையே...!"

"உனக்கு எப்பவும் பகிடிதான்...இரா முழுக்க ஒரே வெடிச் சத்தம்....என்னதான் சமாதானச் சூழல் என்றாலும் வெடிச்சத்தத்தைக் கேட்டால் என்னென்னமோ நினைவுக்கு வருகுதேயொழிய நித்திரை வருகுதில்லை...."

"எங்கடை வீட்டிலையிருந்து மூன்றாவது வீட்டிலை ஒரு பென்சனியர்.... ஒரு இருதய நோயாளி... அயல் பொடியள் போட்ட வெடியாலை....பிறஷர் கூடி.... இரவிரவா ஆஸ்பத்திரிக்கு கொண்டு போவதாகப் போட்டுது...."

"ஏன் இன்னொரு பொடியனுக்கு ஈக்கில் வாணம் கண்ணிலை காயத்தை ஏற்படுத்திப் போட்டுது....."

"கொண்டாட்டம் நல்லதுதான்... ஆனால் அது மற்றவர்களுக்கு திண்டாட்டமாகி விடக்கூடாது....வெடி வெடிச்சுக் கொண்டாடுமளவுக்கு எங்களுக்கு என்ன விடுதலை கிடைச்சுப் போட்டுது..."

"நல்லாய் கேட்டாய் போ... நாங்கள் வெடி வெடிச்சு காசைக் கரியாக் கிறம்....தென்பகுதி ஆட்கள் எங்களுக்கு வெடிவித்து கரியைக் காசாக்கிறார்கள்......"

"அப்ப எல்லா வகையிலும் நாங்கள் ஏமாளிகளாகிக் கொண்டிருக்கிறம் என்றே சொல்லுறாய்..."

இதிலென்ன சந்தேகம்... சமாதானம்...எங்களிட்டை இருந்த இருப்பையும் அள்ளிக்கொண்டு போறதாத்தான் வந்திருக்கு...'

தெருவாசி

# இனநல்லுறவைப் பேணுவதற்கு அம்பாறை சந்திப்பில் இணக்கம்

(அம்பாறை)

இனநல்லுறவு, அமைதி, சமாதானம் பேணுவதில் அம்பாறை மாவட்டம் இதுவரை காட்டிவரும் அக்கறையை தொடர்ந்தும் பேணி ஏனைய மாவட்டங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழும் நிலையை வலுப்படுத்துவதென, முத்தரப்பு சந்திப்பில் இணக்கம் காணப்பட்டது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகள், பொலிஸ் தரப்பினர் கலந்துகொண்ட முத்தரப்பு சந்திப்பு நேற்று அக்கரைப்பற்றில் இடம்பெற்றபோதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

அக்கரைப்பற்றில் உள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில், அம்பாறை மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரேஜ் ஹஜ்வோசன் தலைமையில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சார்பில், மட்டு - அம்பாறை துணை அரசியற்துறைபொறுப பாளர் கிருசன் தலைமையில், அம்பாறை மாவட்ட துணை அரசியற் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், கல்முனைப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ராஜ்குமார் மட்டக்களப்புப் பிரதேசப் பொறுப்பாளர் சேனாதிராஜா, வீரமுனைக் கோட்டப்பொறுப்பாளர் பிள்ளை வாணன் ஆகியோரும் -

முஸ்லிம் தரப்பில் அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளன செயலாளர் ஐ.எம்.இப்றாஹிம், முஸ்லிம் காங்கிஸின் அக்கரைப்பற்று அமைப்பாளரும், கனிப்பொருள் கூட்டுத்தாபன நிறைவேற்றுப் பணிப்பாளருமான யூ.எல். உவைஸ் உட்பட கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் ஏ.ஆர். ஏ.அஸீஸும் கலந்துகொண்டனர்.

பொலிஸார் தரப்பில் கல்முனை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.எச்.எம்.நசீம், அக்கரைப்பற்றுப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரீ.எம்.ஐ.எம் புஹாரி, பொத்துவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.ஏ.வாகித், திருக்கோவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எச்.ஏ காரியப்பர், கல்முனை பொலிஸ் பெரும் குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரி ஜெமீல் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சுமுகமான முறையில் சுமார் மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் பல்வேறு பிரச்சினைகளும் குறித்து ஆராயப்பட்டு சுமுகமான முடிவுகள் எடுக்கப்பட்டன.

பொலிஸாரின் கடமைகளுக்கு மதிப்பளித்து, குழப்பமேற்படாத வண்ணம் புரிந்துணர்வு அடிப்படையில் அரசியல் பணிகளை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் ஒத்துழைப்பதெனவும் இந்தச் சந்திப்பில் இணக்கம் காணப்பட்டது.

பொலிஸ் சிவில் நிர்வாகப் பிரதேசங்களில் ஏற்படும் பிரச்சினைகளுக்கும் எமக்கும் சம்பந்தமில்லையென விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் கிரிசன் தெரிவித்த அதேவேளை இத்தகைய பிரச்சிரனைகளுக்கு தீர்வு காணவேண்டியது பொலிஸாரின் பொறுப்பெனவும், அவர்களுடைய கடமையின்போது விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு தொடர்ந்தும் வழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.

மூதூர், கிண்ணியா போன்ற இடங்களில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் போன்று இந்த மாவட்டங்களில் இடம்பெற ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் எனவும் கிரிசன் செய்தியாளர்களிடம் இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிடுகையில் தெரிவித்தார்.

தமிழ் - முஸ்லிம் நல்லுறவு வலுப்பெற்று சுமுகமான சூழ்நிலை தொடர்வதை இரு தரப்பும் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலு[ம்] தெரிவித்தார்.

(07)

